
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 10 செவ்வாய்க்கிழமை (24.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 115



சிம்புவின் இலக்கு
07



சாதிப்பவர் கடவுள்
11

தவறாகப் பயன்படுத்தாதீர்




05



ஏறாத போதை நிறுத்தம்
12

# அபிவிருத்தியின் நண்பர்களாகவே ஊடகங்கள் செயற்பட வேண்டும்



(யாழ்ப்பாணம்)

அரசியல் என்பது அபிவிருத்தியுடன் கூடியதாக இருப்பதுதான் அந்த நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது. அதுதான் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அரசியல்வாதிகளும் கூட முன்னோக்கிச் செல்ல உதவுவதாகவும் அமையும்.

அபிவிருத்தியின் நண்பர்களாகவே ஊடகங்கள் செயற்பட வேண்டும். அரசியல் செய்திகளையும் ஏனைய செய்திகளையும் வழங்குவதை விடப் பிரதானமாக அபிவிருத்தி நோக்கி மக்களை வழிகாட்டிச் செல்வதே ஊடகங்களின் பிரதான செயற்பாடாக இருக்க வேண்டும்.

அபிவிருத்திக்கூடான அரசியல் செயற்பாடுகளே இன்று மக்களை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளாக இருக்கும்.

நேற்று யாழ். விஜயம் செய்த இந்திய அணு விஞ்ஞானியான அப்துல் கலாம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.நகரில் உள்ள ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற ஊடக வியலாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு (15ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டின் பின்புறத்தில் குழந்தை புதைப்பு

(கிளிநொச்சி)

பிறந்த குழந்தையைத் தனது வீட்டின் பின்புறத்தில் புதைத்த சம்பவமொன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணகைபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை, பிறந்த குழந்தையை வீட்டின் பின்புறத்தில் குடும்பத்தினர் புதைத்துள்ளனர். குறித்த குழந்தையைப் பிரசவித்த தாயிடம் அயலவர்கள் குழந்தை எங்கே எனக் கேட்டவேளை, அது செத்துப் பிறந்ததால் குழந்தையைப் புதைத்து விட்டோம் எனத் தெரிவித்தார். எனினும் இவர் மீது சந்தேகம் கொண்ட அயலவர்கள் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு (15ஆம் பக்கம் பார்க்க)

## மரணத்துக்கான முயற்சி பனை நடுவில் பலித்தது



(யாழ்ப்பாணம்)

பனை மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் பெரியான் தவராசா என்பவரின் சடலம் வட் டுக்கோட்டைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 6.30 மணியளவில் சுழிபுரம் காளுவன் பகுதியில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவர் வாய்பேச முடியாத நிலையில் சகோதரியுடன் வசித்து வந்துள்ளார். அன்றைய தினம் அதிக மதுபோதையில் வீட்டிற்கு வந்துள்ளார். வீட்டில் நித்திரைக்குச் சென்றவர் காலை அருகில் உள்ள காணியில் உள்ள பனை மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (எஸ்)

## ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும்



(கொழும்பு)


அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்கனவே உள்ள அதிகாரங்களைக் கூட வழங்கமாட்டோம் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பலப்படுத்தி ஜனநாயக ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கும் தேவை எழுந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்துக்காக அரசாங்கத்துடன் சார்ந்திராத தமிழ் (15ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் நிலைமை தொடர்பாக அமைச்சரிடம் கேட்டறிந்தார் கலாம்

## கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளையும் சந்தித்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த இந்திய அணு விஞ்ஞானியும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டார்.

நேற்றைய தினம் வடமாகாண ஆளுநரின் வாசஸ்தலத்திற்கு விஜயம் செய்த அப்துல் கலாமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து யாழ் மாவட்டத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பிலும் யுத்தத்தின் பின்னரான மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் மக்களின் (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான எந்தச் சவாலையும் ஜெனிவாவில் எதிர்கொள்ளத் தயார்

### அரசாங்கம் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் எந்தவகையான அனைத்துலக அழுத்தங்களையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளதாக அமைச்சரும் மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் சிறப்பு தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்படக் கூடிய எந்த நடவடிக்கையையும் எம்மால் தடுக்க முடியும். நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை இந்த அமர்வுகளில் விவாதிக்கப்படும் என்று நாம் கவலைப்படவில்லை.

என்ன நடந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு எம்மைத் தயார்ப்படுத்தியுள்ளோம். ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் எந்தத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்.

இலங்கைக்கு எதிராக அனைத்துலக சமூகம் எந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முனைந்தாலும் அதனை எம்மால் முறியடிக்க முடியும். போர்க்குற்ற விவகாரங்களைக் (15ஆம் பக்கம் பார்க்க)

## மோடியுடன் ரணில் பேச்சு

(கொழும்பு)

ஐந்து நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணி, பொலிஸ் அதிகார விடயத்தில் கூட்டமைப்புடன் உடன்படும் பிள்ளையான்

(மட்டக்களப்பு)

வடக்கு,கிழக்கு இணைப்பு தவிர்ந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுடன் தானும் தனது கட்சியும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளதாக, கிழக்கு மாகாண முதல்வரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஜனவரி முதலாம் திகதியிட்டு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக ஊடகங்களிலும் அரச தரப்பினராலும் வெளியிடப்படும் கருத்துக்களின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் மாகாணசபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் (15ஆம் பக்கம் பார்க்க)

# கவிதை வரிகள் கூறி மாணவர்களுடன் கலந்து குலாவினார் அப்துல் கலாம்



(யாழ்ப்பாணம்)

கவிதை வரிகள் கூறியும் மாணவர்களுடன் அளவளாவியும் யாழ். இந்துக் கல்லூரியின் பெருமை பேசினார் இந்திய அணு விஞ்ஞானி அப்துல் கலாம்.

யாழ். இந்துக் கல்லூரியின் பெருமை என்ன என்று சிந்தித்தேன். அது பூமியைப் போலவும், சூரியனைப் போலவும் தன்னைத் தானே சுற்றி 111 வருடங்களாக ஆயிரக்கணக்கான மாணவர்களை கல்வியியலாளர்களாகவும், அறிஞர்களாகவும் உருவாக்கியிருப்பதாக யாழ். இந்துக் கல்லூரிக்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவரும் அணு விஞ்ஞானியுமாகிய டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றுக்கணக்கான மாணவர்களை சந்தித்து உரையாடியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட அவர், பல்லாயிரக் கணக்கான மாணவர்களை கல்வியியலாளர்களாகவும், அறிஞர்களாகவும் இந்துக் கல்லூரி உருவாக்கியிருக்கின்றது.

இதேவேளை இந்த மாணவர்களிடத்தில் பல்வேறு திறமைகளை வளப்படுத்திய ஆசிரியர் சமூகம், முன்னாள் மாணவர்கள் ஆகியோருக்கும் அவர் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது யாழ். இந்துக் கல்லூரி அதிபர் கணேசராசாவிடம் ஒருதொகுதி நூல்களை அப்துல் கலாம் கையளித்தார். இதன்போது யாழ். இந்துக் கல்லூரி சார்பில் டாக்டர் அப்துல் கலாமிற்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

அத்துடன் அப்துல் கலாம் மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றையும் நிகழ்த்தினார். மண்டபத்தில் குழுமியிருந்த மாணவர்களில் 10 மாணவர்களை அழைத்து கேள்வி பதில் ரீதியில் கலந்துரையாடலையும் மேற்கொண்டதுடன், இதன்போது கவிதை வரிகளிலும் மாணவர்களுக்கு அறிவுசார் விடயங்களைச் செய்து காட்டினார். (பா)

## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பொது அறிவித்தல் - 2012

**1. 2012 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிறுவனங்களும் 2012 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமக் கட்டணங்களை 31.03.2012 இற்கு முன்னர் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**2. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இரு மருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் சபையினால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**3. துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2012**

2012 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திருமதி யோ.பற்குணராஜா**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C/1255)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



இந்து கலாசார அமைச்சின் ஊடாக ஆலய புனரமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபா கிடைப்பதற்கு ஆவன செய்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**



மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்)**



மற்றும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்

**கந்தசாமி கமலேந்திரன் (கமல்)** ஆகியோருக்கும் இந்நிதி கிடைப்பதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான

**வீரமுத்து கண்ணன் (ரஜனி)** அவர்களுக்கும் எமது ஆலய பரிபாலன சபை மற்றும் பொது மக்கள் சார்பாக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



(C/1531)

சிவகாமி அம்மன் வீதி, காரைநகர்.

பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான நற்பணிச் சபையும், அடியார்களும்.



## மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்





அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு (J/90) பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் தளபாடக் கொள்வனவுக்காக ரூபா 50 ஆயிரம் வழங்கிய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் **சில்வேஸ்திரி அலென்ரின் (S.A.உதயன்)** அவர்களுக்கும் மற்றும் E.P.D.P யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் **கந்தசாமி கமலேந்திரன் (கமல்)** அவர்களுக்கும் E.P.D.P நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான **அம்பலம் இரவீந்திரதாசன்** (J.P) அவர்களுக்கும் எமது கிராமமும் சங்கமும் மக்களும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது கிராமத்திற்கு அபிவிருத்திகள் தொடரவேண்டும் என மென்மேலும் வாழ்த்துகின்றோம்.

(C/1254)





**அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் மக்களும்**

சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## கட்சியாகப் போவது எந்தக் கூட்டமைப்பு?

தமிழர் நலன் சார்ந்த கட்சிகளை இணைத்து ஜனநாயக ரீதியிலான தீவிர போராட்டங்களில் இறங்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதென கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தீர்மானம் மேற்கொண்டிருப்பதனை அறிவிக்கவே அந்த செய்தியாளர் மாநாட்டைக் கூட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கூட்டமைப்பின் பிரதான கட்சியாகிய தமிழரசுக் கட்சியோ மற்றைய இரு கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகியவையோ அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப் உம் ரெலோவுமே கூட்டமைப்பைப் பதிவு செய்தல், கிளைகள் அமைத்துப் பலப்படுத்தல், ஏப்ரல் மாதத்துக்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது மாநாட்டை நடத்துதல் ஆகிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது மற்றும் மாவட்டங்கள் தோறும் கிளைகளை நிறுவி ஜனநாயகப் போராட்டங்களில் தீவிரமாக இறங்குவது போன்ற கூட்டமைப்பின் இந்த மிக முக்கிய முடிவுகளை சுரேஷ், செல்வம், ஆனந்தன், வினோ ஆகியோரே வெளியிட்டுள்ளனர். இவர்கள் தேர்தலில் நின்று வெல்வதற்கான சின்னத்தை வழங்கிய, இவர்களைக் கூட்டமைப்பாக இணைத்துக் கொண்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் எவரும் இந்த முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் காணப்படவில்லை.

ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோரும் அங்கே வரவில்லை. அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளின் போதுதான் கூட்டமைப்பு அவர்களைக் கண்டுகொள்வதேயில்லை என்று பார்த்தால், ஐந்து கட்சிகளும் இணைந்து ஒரு கட்சியாகப் பதிவு செய்துகொள்ளும் தீர்மானம் எடுத்திருப்பதை அறிவிக்கும்போது கூடவா அவர்கள் அங்கு இல்லாமல் போகவேண்டும்?

கடந்த மாத இறுதியில், கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் திருகோணமலையில் சம்பந்தன் தலைமையில் நடந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனவும், வடக்கு கிழக்கு முழுவதும் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தும் விதமாக கிளைகளை அமைப்பது எனவும், வருடாந்த மாநாட்டை அடுத்த வருடம் மட்டக்களப்பில் நடத்துவதற்குமே தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சுரேஷ், செல்வம் ஆகியோரின் செய்தியாளர் மாநாடு குறித்து தமிழரசுக் கட்சியும், சங்கரி, சித்தார்த்தன் ஆகியோரும் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தமிழ்மக்கள் அறிய விரும்புவது இயல்பே. தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் கேட்டபோது, கூட்டமைப்பின் பேச்சாளர் என நியமிக்கப்பட்டவர் தன்னிச்சையாக எதையும் அறிவிப்பதை ஏற்க முடியாது; இதற்குமேல் தான் கருத்தும் கூறமுடியாது என்று சொல்லி நிறுத்திக் கொண்டார்.

அந்த மாநாட்டில் சுரேஷ், அரசுடன் சாராமல் தமிழ்மக்களின் நலனுக்காக செயற்படும் ஏனைய தமிழ் கட்சிகளையும் இணைக்கும் செயற்பாடு இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியையே அவர் குறிப்பிட்டுச் சொல்வதாகக் கொள்வதற்கு இடமிருக்கிறது. இதுவும் தமிழரசுக் கட்சி உடன்பட்டுக் கொண்ட அறிவிப்பா அல்லது தமிழரசுக் கட்சியை மிரட்டுவதற்காக சுரேஷ் எய்த கணையா என்பது தெரியவில்லை.

ஏனெனில், சில நாட்களுக்கு முன்னர்தான், கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்துகொள்ள தமிழரசுக் கட்சி மறுக்குமேயானால், சங்கரி, செல்வம், சித்தார்த்தன், கஜேந்திரகுமார் ஆகியோரை இணைத்துக்கொண்டு அதையே கூட்டமைப்பாகப் பதிவு செய்யும் முடிவுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று சுரேஷ் எச்சரித்திருந்தார்.

இந்த செய்தியாளர் மாநாடும் தமிழரசுக் கட்சிக்குச் சுரேஷ் விடுக்கும் மற்றொரு எச்சரிக்கை என்றே தெரிகிறது.

– ஆசிரியர்

# தீர்வுத் திட்டத்தின்மூலம் எவருக்கும் கூடுதல் அதிகாரம் வழங்கப்படமாட்டாது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிலர் இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வுகளை தொடர்ந்தும் பேணுவதற்கு முயற்சி செய்கின்றனர் என இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

லுணுகம்வெஹர பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வுகளை தொடர்ந்தும் பேணுவதற்கு முயற்சிக்கின்றனர். இதன் காரணமாகவே தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைக் கோருகின்றனர்.

தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கினால் என்ன நேரும் முஸ்லிம் மக்கள் ஆத்திரமடைவார்கள். இதனால் முஸ்லிம் தமிழ்ப் பிரச்சினை உருவாகும்.

போர் நிறைவடைந்துள்ள நிலையில் எதற்காக அரசியல் தீர்வுத் திட்டம் எனக் கேள்வி எழுப்பும் கடும்போக்கான அரசியல்வாதிகள் கூட்டமைப்பில் இருக்கிறார்கள்.

தீர்வுத் திட்டத்தில் யாருக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படப் போவதில்லை. அவ்வாறு வழங்கினால் சிங்களவர் தமிழரை எதிரியாகப் பார்ப்பார்கள்.

அவ்வாறான நிலைமைகள் உருவாகாமல் அனைவரும் சமாதானமாக வாழக் கூடிய ஓர் நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அனைவரும் சமாதானமாக வாழக்கூடிய நிலைமை உருவாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் இனவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றனர் இது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துவிச்சக்கரவண்டிக்கு உரிமைத்தகட்டைப் பெறவும்

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள துவிச்சக்கர வண்டிகளுக்கு இவ்வருட மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அதற்கான உரிமத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் வருடத்திற்கான ஆதன வரிகள் வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (104)

# சட்டவிரோத மதுபான விற்பனை; கிளிநொச்சியில் கண்காணிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்கள் மீது பொலிஸாரின் கண்காணிப்பு மிகவும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி நகரை அண்மித்த கிராமப்புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் இவ்வாறு சடுதியாக அதிகரித்திருக்கும் சட்டவிரோத மதுபான விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் பற்றிய தகவல்கள் பொலிஸாரினால் திரட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு இவ்வாறு கிளிநொச்சி கட்டாவளை ஊரியான் கிராமத்தில் மாலை வேளையில் வீடு ஒன்றில் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டவர்களும், மது அருந்திக் கொண்டிருந்தவர்களும் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை, குறித்த சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடடவர்கள் திரும்பத் திரும்ப அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு வேலை வாய்ப்பின்மை, வறுமை போன்றவை காரணங்களாக இச்சமூக விரோதச் செயற்பாடுகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (பா)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு 49 ஆயிரத்து 929 இடங்கள் தரிசிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பன்னிரண்டு சுகாதார வைத்தியப் பிரிவுகளிலும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பொது அமைப்புக்கள், பொலிஸார், படையினர் மற்றும் மக்கள் பங்களிப்புடன் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரிவுகளிலுள்ள வளங்கள் முழுமையாக ஒவ்வொரு வலயத்தினுள்ளும் பிரயோகிக்கப்பட்டு ஒருங்கிணைந்த வகையில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிர முனைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் யாழ் மாவட்டம் முழுவதும் வீடுகள், தொழிற் கூடங்கள், வியாபார தலங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணிமனைகள், பொது இடங்கள், பராமரிப்பற்ற வளவுகள் உள்ளடங்கலாக 48 ஆயிரத்து 929 இடங்கள் தரிசிப்பு செய்யப்பட்டது. இவற்றில் 13ஆயிரத்து 10 இடங்கள் நுளம்புகள் பெருக்கமடையக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டதாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்ட இடங்களில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உடனடியாக உரிமையாளர்களால் துப்பரவு செய்யப்பட்டது.

இவற்றுள் 948 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டன. 237 பேருக்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான வகையில் சுற்றாடலை வைத்திருந்தவர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வெற்றிகரமாக தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தினை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொலிஸார், பாதுகாப்பு படையினர், பொது அமைப்புக்கள், பொது மக்கள் அனைவருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் சார்பாகவும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துள்ளதுடன் அனைவரும் அன்றாடம் நீங்கள் பழகும் இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வாய்ப்பான இடங்கள் உள்ளதா என அவதானிப்பதுடன் அன்றய தினமே அவற்றை இல்லாதொழிப்பதன் மூலம் யாழ். மாவட்டதிலிருந்து டெங்கு நோயை இல்லாதொழிக்க பங்கெடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

## புலிகளின் கட்டடங்கள் விடுதிகளாக மாற்றம் யாழ். பல்கலை மாணவர்கள் பயன்படுத்துவர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளினால் நிர்மாணிக்கப்பட்ட சில கட்டடங்கள், பல்கலைக் கழக மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்தப்பட உள்ளதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலிகளால் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள சில கட்டடங்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. இவற்றை, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ற வகையில் விடுதிகளாகப் பயன்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள்து என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

# சங்கானையில் காணிகளற்றவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் நீண்ட காலமாக கோயில்களுக்குச் சொந்தமான காணிகளிலும் சில தனியார் காணிகளிலும் வசித்து வந்த மக்களின் பெரும்பாலான பிரச்சினைகள் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாகத் தீர்வுகள் காணப்பட்டுள்ளது.**

**சங்கானைப் பிரதேச செயலகத்தில் உரிய ஆலய தர்மகத்தா சபையினர் காணிகளுக்குச் சொந்தமான தனியார் மற்றும் குடியிருக்கும் மக்கள் பிரதேச செயலக அதிகாரிகள் சகிதம் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளதோடு, சிலவற்றுக்கு நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.**



அந்தவகையில் சங்கானைப் பிரதேசத்தில் உள்ள துணவி அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவிலுக்குச் சொந்தமான காணிகளிலுள்ள 21 குடும்பங்கள், அராலி கிழக்குப் பத்திரகாளி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் 25 குடும்பங்கள், அராலி கிழக்கு சிவன் கோவில காணியில் குடியிருக்கும் 50 குடும்பங்கள், சங்கானை மேற்கு வடக்கு மடம் காணியில் உள்ள 44 குடும்பங்களுடன், பொன்னாலையில் உள்ள தனியாரான சி.பத்மநாதன் என்பவருக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் 21 குடும்பங்கள் தொடர்பிலேயே ஆராயப்பட்டு தீர்வு காணப்பட்டது.

நீண்ட காலமாக மேற்படி காணிகளில் குடியிருக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற முடியாது பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வந்தனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தமையினை அடுத்து, அவர் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி அந்த மக்களுக்கு குறித்த காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படி ஆலய காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு அந்தக் காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் ஆலய நிர்வாகத்திடம் இருந்து அம்மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, குறித்த குடியிருப்பாளர்கள் மாதாந்தம் மிகச்சிறிய தொகை ஒன்றினை ஆலய நிர்வாகத்திற்குச் செலுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு தனியாருக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் மக்கள் தற்போதைய சந்தை விலை அன்றி ஒரு நியாயமான விலையினை காணி உரிமையாளருக்கு வழங்கி காணியினை உரிமையாக்கி கொள்வதற்கு காணி உரிமையாளரான சி.பத்மநாதனின் சம்மத்துடன் முடிவெடுக்கப்பட்டது.

அத்தோடு இந்நடவடிக்கைகள் அனைத்தும் சட்டரீதியாக மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதோடு, அம்மக்களுக்கு வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அரச மற்றும் அரசசார்பற்ற உதவித் திட்டங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜீவன், சங்கானை பிரதேச செயலாளர், உதவிதிட்டப் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## தரம் 6 மாணவர்களுக்கு தென்னங்கன்று விநியோகம்

(பருத்தித்துறை)

சகல பாடசாலைகளிலும் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு குறுகிய காலத்தில் பயன்தரும் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வடமாகாண தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் சகல கோட்டக் கல்வி நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளிலிருந்து தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களின் பெயர் விபரங்கள் பாடசாலை உள்ளடங்கல்களாக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபரங்களை பிராந்திய முகாமையாளர், வடமாகாண பயிர்ச் செய்கை சபை, 595-101, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒரு பிரதியும், மறுபிரதி அவ்வப் பகுதிக் கோட்டக் கல்வி அதிகாரிக்கும் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## முப்பெரும் ஆண்டு விழாவில் விருதுகள் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)



முப்பெரும் ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியன இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டன.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் க.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உயிர்நீத்த சமூக முன்னணித் தலைவர்களின் அஞ்சலி நிகழ்வுடன் ஆரம்பமாகி, வரவேற்பு நடனத்தைத தொடர்ந்து வரவேற்புரையை சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஜே.காணிக்கைநாதன், சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சு.மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து பாராட்டு அரங்கம் நடைபெற்றதுடன் இதில் ஆன்மீகச் செல்வர் இ.சாந்தகுமார் தலைமையில் "சமூக ஜோதி விருது" நான்கு பேருக்கும், "துறைசார் வித்தகர் விருது" ஐந்து பேருக்கும், "சமூகப் பற்றாளர் விருது" ஏழு பேருக்கும் "சமூக முன்னோடி விருது" எட்டுப் பேருக்கும், "சமாதான நீதவான் விருது" ஏழு பேருக்கும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சு.மோகனதாஸ் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து பரிசளிப்பு அரங்கம் இடம் பெற்றது. இவ்வரங்கத்தில் தந்தையை இழந்த மாணவர்களின் கல்விகென தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சமாச புலமைப்பரிசில் நன்கொடை வழங்கும் நிகழ்வு ஆகியன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இலங்கை கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசா, யாழ்.பல்லைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி தி.வேல்நம்பி, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலைவாணி இராமநாதன், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச பிரதம போசகர் ஆர்.எம்.நாகலிங்கம், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட முன்னாள் பீடாதிபதி சபா.ஜெயராசா, கலாபூசணம சைவப்புலவர் அ.செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)

## குற்றச் செயலில் ஈடுபடுவோர் குறித்து மறுபரிசீலனைக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொலிஸ நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் மீண்டும் குற்றச் செயலில் ஈடுபடுவது தொடர்பில் மறுபரிசீலனை செய்யும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது.

வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன் ஏற்பாட்டில் கொழுமபு குற்றப் புலனாய்வு அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் கருத்துரை வழங்கினர்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களில் இருந்து 50 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் எனப் பலர் கலந்துகொணடனர்.

யாழ்.மாவட்டத்தில் குற்றச் செயல்களின்னால் தண்டனை பெற்று வெளியேறியவர்கள் மீண்டும் குற்றச் செயலில் ஈடுபடுபவது குறித்து பரிசீலனை செய்து குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடனும், குற்றங்களைக் கண்டறியும் வழி முறைகளையும் ஆராய்வதற்கான நோக்குடனும் கலந்துரையாடல் இடம்பெற்றது. (எஸ்)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் மாசி மாதம் 13ஆம் திகதி கொழும்பில் பி.எம்.ஐ.சி.எச்.மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் ஆண்டு நிறைவு விழாவிற்கு இலங்கையின் சகல மாவட்டங்களிலும் இயங்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் காரியாலயங்களில் இருந்தும் பிரதேச ரீதியாகப் பத்துப் பேர் வீதம் கலந்துகொள்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதற்கேற்ப இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை தனது பிரதேச கிளைகளில் இருந்து 10 உறுப்பினர்களது விபரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் முன்னராக அனுப்பி வைக்கும்படி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர்களுக்கான பிரயாண ஒழுங்குகள் செஞ்சிலுவைச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக் கப் பட்டுள்ளது. (பா)

## உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பொலிஸாரால் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் யாழ்.நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 03 sri5425 இலக்க கார்-01, NPV 07995 இலக்க மோட்டார் சைக்கிள்-01, கைத்தொலைபேசி (போன்)-01, NPJC9938 இலக்க மோட்டார் சைக்கிள்-01, பதிவிலக்க மற்ற மோட்டார் சைக்கிள் -01 ஆகியன மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். உரிமை கோரத் தவறும் பட்சத்தில் அவை அரசுடமையாக்கப்படும் என நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## தொண்டர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் முதலுதவித் தொண்டர்களுக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் பிரிவுகள் தோறும் முதலுதவிப் பயிற்சியினை நிறைவு செய்து ஆலயங்களிலும், பொது இடங்களிலும் முதலுதவிச் சேவையினைச் சிறப்பாக வழங்கிய தொண்டர்கள் மூவரது பெயர் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வாறானவர்களது பெயர் விபரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைக்கு அனுப்பிவைக்க முடியும்.

இவ்வாறு தரப்பட்டவர்களுக்கே எதிர்வரும் சனிக்கிழமை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிய வருகிறது. (பா)

# சிறுபிள்ளைகள் ஒழுக்கநெறிகளை உரியமுறையில் கடைப்பிடிக்க வேண்டும்

### வடமாகாண பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர்

(திருநெல்வேலி)

அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை ஆகியவற்றை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்பவர்கள் நிச்சயம் மேன்மையடைவார்கள். எல்லோரிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அன்பு என்பது அம்மாவாகும். அம்மாவுக்கூடாக இந்த உலகில் வேறு எதுவுமே இல்லை என வடமாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் திருமதி ஜெயா தம்பையா தெரிவித்தார்.

திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வடபிராந்திய சத்தியசாயி நிலையங்களின் இணைப்புக்குழு நடாத்திய அன்புவார ஒன்று கூடல் நிகழ்வில் சிறப்புரை ஆற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்; குழந்தைகளுக்கான ஆரம்பப் . பிரிவுக் கல்வி



மிகவும் முக்கியமானதாகும். சிறு வயதுப் பழக்கம் வாழ்நாள் முழுவதும் தொடரும் என்பதால் சிறு பிள்ளைகளின் ஒழுக்க நெறிகள் உரியமுறையில் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். இன்றைய சிறார்கள் நாளைய நாட்டின் சிற்பிகள். மனித மேம்பாட்டுப் பயிற்சி சிறந்த சமுதாயம் உருவாகுவதற்கு வழி வகுக்கும்

யாழ்.மாவட்டத்தில் நிறையப் பிரச்சினைகள் உண்டு.பாலியல், போதைவஸ்துப் பாவனை, கொள்ளைகள் போன்ற பல வன்முறைகள் உள்ளன. இவை இல்லாமல் செய்யப்படவேண்டும். நல்லதொரு சமுதாயம் கட்டி எழுப்பப்படல்வேண்டும். நாட்டின் நல்ல பிரஜைகளாக மாணவர்கள் மாறவேண்டும். அன்புக்குத் தனிமகத்துவம் உண்டு. கல்விதான் முதலிடத்தில் உள்ளது. எனக் கூறினார்.

இந் நிகழ்வில் ஆசியுரையை வடபிராந்திய சத்திய சாயி நிலையங்களின் இணைப்புக்குழுத் தலைவர் வைத்தியக் கலாநிதி ஆர். கணேசமூர்த்தி, சிறப்புரையை வடமாகாண கல்வித்திணைக்கள செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் ஆகியோர் வழங்கினர்.

யாழ். மத்திய சத்திய சாயி நிலையத்தினரின் இராம இராச்சியம், நடன நிகழ்வு இடம்பெற்றதுடன்,மனித மேம்பாட்டுப் பாடல்கள் இசைக்கப்பட்டன. தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (137)

# சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

சம்புத்த ஜயந்தி விழாவை முன்னிட்டு பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு ஆரியகுளம் நாகவிகாரை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஹட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மானிப்பாய் பகுதி பாடசாலைகளில் இருந்து வறிய மாணவர்கள் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. புத்தர் பிறந்து 2600 வருடங்கள் நிறைவையொட்டியே பாடசாலைமாணவர்களுக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின்,நாகவிகாரை பௌத்த தேரர் 512 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.(எஸ்)

# சிவில் பாதுகாப்பு அடையாள அட்டையை தவறான வழிகளுக்கு பயன்படுத்தக்கூடாது

### யாழ். பொலிஸ் பொதுசன அதிகாரி

(நல்லூர்)

கிராமிய சிவில் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்கள் தமக்கு பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ள ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அடையாள அட்டையினை தவறான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடாது என யாழ். பொலிஸ் நிலைய பொதுசன தொடர்பு அதிகாரி ஜெயந்த தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாலை கந்தர்மடம் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அண்மையில் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை நெடுந்தீவுப் பகுதியில் ஒருவர் தவறான நடவடிக்கைக்காக பயன்படுத்தியமை கண்டறியப்பட்டுள்ளது.

கிராம மட்டங்களில் இடம்பெறும் குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் பொலிஸாரினால் கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொதுமக்களின் உதவியுடன் அமைக்கப்பட்டன.

இவ்வாறு அமைக்கப்பட்ட பாதுகாப்புக்குழுக்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். வீரங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அடையாள அட்டைபெறத்தவறியோர்களுக்கு கிராமங்கள் தோறும் பொலிஸாரினால் தற்போது அவை வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாவண்ணம் அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும்.

மேலும் குற்றச்செயல்கள் தொடர்பாக, பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்பதற்கு வருகை தரும் சிவில்பாதுகாப்புக்குழுவினர் தமது அடையாள அட்டையினை பயன்படுத்தி தமது பகுதிக்குரிய பொலிஸாருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்றார்.

இந்நிகழ்வில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களுக்கு பொலிஸ் அதிகாரி ஜெயந்தவினால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கந்தர்மடம் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஒஸ்ரின், சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (26)

# கொக்கிளாயில் கால்கோள் விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயத்தில் உள்ள கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த புதன்கிழமை பாடசாலையின் அதிபர் விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு வலய பாடசாலைகள் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த 16ஆம் திகதி அன்று நிகழ்த்துவதற்கு சுற்று நிருபம் வலயக்கல்வி பணிமனையினால் அனுப்பப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை அன்று ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து கொக்கிளாய் பாடசாலைக்கு கற்பிக்கவருகின்ற ஆசிரியர்கள் வருகை தருவதில் உள்ள வசதியீனங்கள் முதலியவற்றை கருத்திற்கொண்டு புதன்கிழமை கால்கோள் விழாவை நடாத்தியதாக பாடசாலை சமூகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# நுண்கலைப் பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப்படும் நுண்கலைத் துறை சார் பாடங்களுக்கான புதிய வகுப்புக்களில் இணைய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் பிரதான பாடங்களான வாய்ப்பாட்டு, நடனம் (பரதம், கதகளி, மோகினி) வயலின், கிறறார், ஓகன், (கீபோட்) புல்லாங்குழல் ட்றம், மிரு தங்கம், சித்திரம் நாடகமும், அரங்கியலும், வீணை மற்றும் சிறப்புப்பாடங்களான கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக்கலை, (முகஒப் பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவசிந்தாந்தம்) ஆகிய பாடங்களுக்கே விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இதைவிட துணைப்பாடமாக ஆங்கிலம் ஆகிய பாடங்களை பயில விரும்புவோர் இக்கல் லூரியில் விண்ணப்பப் படிவங் களை பெற்று பூர்த்தி செய்து எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

## "காந்தீயம்" இதழ் வெளியீடு

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ ஏடான "காந்தீயம்" இதழின் 2011டிசெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழின் இலவசப் பிரதியொன்றைப்பெற விரும்புவோர் 5ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் காந்தீயம் இல.774 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியுமென 'காந்தீயம்' இதழாசிரியர் எம் .ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.



மடு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பில் இடமிருந்து வலமாக மாவட்ட இணைப்பாளர் லக்சி தங்கரட்ணம், மடு உதவி அரசாங்க அதிபர் எவ்.சி.சத்தியசோதி, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.ஏ.சரத்ரவீந்திரன் மற்றும் மாவட்ட புள்ளி விபரவியலாளர் மனுவல் வித்தியானந்த நேசன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வழங்குவதை காணலாம்.

# முரசின் இன்றைய பலன்

(24.01.2012 -செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் தை மாதம் 10 ஆம் திகதி.
பிரதமை பிற்பகல் 1.20 வரை. நட்சத்திரம் திருவோணம் பிற்பகல் 4.29 வரை.
சித்தயோகம் இராகுகாலம் 3.36 - 5.06 வரை. சுபநேரம் 11.06 - 12.36 வரை.
எமகண்டம் 9.36- 11.06 வரை. குளிகை காலம் 12.36- 2.06 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்பத்தில் சுபகாரியம், முன்னெச்சரிக்கை, கூட்டுமுயற்சி, உறவினர் வருகை. |
| ரிஷிபம் | பயண நன்மை, மனோதிடம், தொழிலில் தாமதம், விருந்துபசாரம். |
| மிதுனம் | நிதானம் நன்று, தடைதாமதம் அகலும், சேமிப்பு உயரும், வாழ்க்கையில் ஒளி. |
| கடகம் | எதிர்ப்புபோட்டி, வேலைவாய்ப்பு, சண்டை சச்சரவுகள், சகோதரர்களால் சிரமம். |
| சிம்மம் | சகோதரஉதவி, வருமானம் கிடைக்கும், முன்னேற்றம், பெற்றோர் உதவி. |
| கன்னி | திறமைவெளிப்படல், ஸ்தலயாத்திரை, தூரதேச உதவி, மனதில் உற்சாகம். |
| துலாம் | இருப்பிடவசதி, புதியவருவாய், அரச உதவி, மறைமுக எதிர்ப்பு. |
| விருச்சிகம் | முயற்சி வெற்றி, செல்வஞ்சேரும், வர்த்தகத்தில் ஈடுபாடு, செல்வாக்கு. |
| தனுசு | சலிப்பு, அரச உதவிகள், அடக்கம் அவசியம், உறவினர் ஆதரவு. |
| மகரம் | ஏமாற்றம், வாகனம் சேரும், பிரச்சினைகள் அகலும், விருந்துபசாரங்கள். |
| கும்பம் | ஸ்திரிகளால்தொல்லை, தொழில்வளம், காரியானுகூலம், வியாபாரத்தில் இலாபம். |
| மீனம் | அச்சம், கழன உழைப்பு, வெற்றிகள் குவியும், மௌனம் நன்று. |

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான களம்!

**[வானவில் 2012 ஜனவரி இதழ் தலையங்கம்]**

வானவில் 2011 டிசம்பர் இதழ் தலைப்பில், அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சம்பந்தமாக, சில முக்கியமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தோம்.

நாம் முன்வைத்த கருத்துக்கள், ஆலோசனைகள் என்பது எமது தனிப்பட்ட வெளியீடுகள் அல்ல. அவை நாம் அன்றாடம் பழகும் தமிழ் சமூகத்தினதும் மற்றும் இலங்கை மக்களினதும் அபிப்பிராயங்களைத் தொகுத்தே முன்வைக்கப்பட்டன. எனவே இவை தமக்குத் தாமே மகுடம் சூடிக்கொள்ளும் 'தமிழ் சிவில் சமூகம்' அல்லது 'தமிழ் புத்திஜீவிகள்' என்ற ஒரு குறுகிய வட்டத்தினரின் கருத்துக்கள் அல்ல.

'வானவில்' மூலமாக இனப்பிரச்சினைத் தீர்வில் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பவர்களின் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டபின்னர், இலங்கையின் அரசியல் அரங்கில் சில ஆக்கபூர்வமான போக்குகள் மேலெழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. நாம் முன்வைத்த கருத்துக்களை ஒட்டிய அல்லது அண்மித்த கருத்துக்களை அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார, குணரத்தின, ரவூப் ஹக்கீம் என்போரும், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், அவரது சகோதரரும் பாராளு மன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஆகியோரும் முன்வைத்ததைக் காணக் கூடியதாக இருந்தது. சில அரசியல் ஆய்வாளர்களும் அதையொட்டி கட்டு ரைகள் தீட்டியுள்ளனர்.

அதேநேரத்தில் அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமது கடுமையான நிலைப்பாடுகளிலிருந்து சற்று இறங்கி வந்ததையும் அவதானிக்க முடிந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு இணைப்பு என்பதை அழுங்குப் பிடியாக வலியுறுத்துவதை நிறுத்தி வைதது துள்ளதாகத் தெரிகிறது.

மறுபக்கத்தில் அரசாங்கம் மாகாணசபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்துப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இவை நல்ல சகுனங்கள்.

ஆனாலும் அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமான பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்படாமல் பார்த்துக் கொள்வதிலும், இரு தரப்பிலுமுள்ள சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்படுவதும் தெரிகின்றது. அரசாங்க அமைச்சரவையிலுள்ள சில பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் எதுவும் வழங்கக் கூடாது என தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள புலிகளுக்கு சார்பான மற்றும் குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தையைத் தடம்புரளவைக்க முயற்சிக்கின்றனர். அதற்கு அனுசரணையாக தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' பத்திரிகை தினசரி செய்திகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் அவ நம்பிக்கையை விதைக்க முயல்கிறது.

அவர்களின் தீய நோக்கங்களுக்கு தூபம் போடும் வகையில் 'தமிழ் சிவில் சமூகம்' என்ற பெயரில், மன்னார் பேராயர் யோசப்பு ராயப்பு அவர்களது பெயரை முதல் கையெழுத்தாகக் கொண்டு அறிக்கையொன்று அண்மையில் வெளியிடப்பட்டது. மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் பெற்று, தமிழ் – முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகையில், மாகாணசபைக்கான தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றவே கூடாது என அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கும் அரைவாசிகளும் மேற்பட்டோர் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இனம்தெரியாத மர்ம நபர்களாக இருப்பதுடன், சாதாரண தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதையும் எதிர்நோக்குபவர்களும் அல்லர்.

எனவே அவர்களுக்கு கடந்த காலத்தில் தமது தேவைகள் பலவற்றை அடைவதற்கு உதவிய யுத்த சூழல் ஒன்று திரும்பவும் ஏற்படுவதை வலியுறுத்தியே, அந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் உறுதியாகவுள்ளது. அரசின் அந்த நிலைப்பாடு யதார்த்தபூர்வமானதும், தந்திரோபாயம் மிக்கதுமாகும்.

ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குழப்பப்பட்டதிற்குக் காரணம், அந்த ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஒருமித்த அங்கீகாரம் இன்றி செய்யப்பட்டதாலேயே என்பது தெளிவானது. எல்லா ஒப்பந்தங்களையும் குழப்புவதில் ஐக்கிய தேசியக் கட்சி சூத்திரதாரியாகச் செயல்பட்டதுடன், ஜே.வி.பி, தமிழ் தலைமைகள் என்பனவும் அதற்கு ஒத்துழைத்துள்ளன.

எனவே கடந்த கால அனுபவங்களை வைத்துப் பார்க்கையில், தற்போதைய சூழலிலும் தீர்வு ஏதும் காண முற்பட்டால், ஐ.தே.க, ஜே.வி.பி என்பன குழப்பும் நிலையே காணப்படுகிறது.

அதனால்தான் 'பாம்பின் காலை பாம்பறியும்' என்பது போல, ஐ.தே.கவுடன் கடந்த பல வருடங்களாகக் கூடிக்குலாவி அரசியல் செய்யும் மனோ கணேசன், ஐ.தே.க தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரியா, சஜித் பிரேமதாச போன்றோர் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகத் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார் போலும்! மனோ கணேசனின் இந்த அறிக்கை ஐ.தே.க போட்டுள்ள அந்தரங்கத் திட்டங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது எனலாம்.



எனவேதான் அரசாங்கம் தனது பங்காளிக் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவெடுத்தது எனக் கருத வேண்டியுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்களின் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்று தெரிய வாய்ப்புண்டு. எனவே அரசாங்கம் 60 வருட கால இனப்பிரச்சினைக்கு ஓரளவாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்கையில், அந்தத் தீர்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையாக அக்கறையிருக்குமானால், அது தன் பிடிவாதப் போக்கைக் கைவிட்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து தன்பங்களிப்பைச் செலுத்துவது அவசியம்.

அதைவிடுத்து 'பிச்சைக்காரனின் புண்' போல இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏதும் ஏற்பட விடாமல், கடந்த காலங்களைப் போல அதைக் குழப்பியடிக்கும் ஐ.தே.கவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தந்திரோபாயக் கூட்டுச் சேருமாக இருந்தால், அது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே இருக்கும். கடந்த காலத் தமிழ் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் போன்றோர் ஆடிய தமிழ் மக்களுக்கு விரோதமான அதே கூத்தை இரா. சம்பந்தன் தலைமையும் ஆடப்போகின்றதா அல்லது ஆரோக்கியமாகச் செயல்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப் போகின்றதா என்பதை, தமிழ் மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை புரிந்து கொண்டால் சரி.

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம் 13

**நிலைபாடு - நிலைப்பாடு**

"சுதேசி என்ற பெயரில் உள்ளூர்த் தொழில்களை ஊக்கப்படுத்தவேண்டும் என்பது ஒரு குழுவினரின் நிலைபாடு" என்பது இணைய மின்னிதழில் நான் படித்த ஒரு கட்டுரையின் சொற்றொடர்.

இத்தொடரில் வரும் இறுதிச் சொல்லான "நிலைபாடு" எனும் சொல்லாட்சி பிழையானது. குழுவினரின் நிலைப்பாட்டைச் (stand) சொல்லவந்தது தவறாகக் குழுவினரின் நிலையைப் பாடுகிறது.

நிலை + பாடு எனும் சொற்களுக்கிடையே "ப்" எனும் மெய்யெழுத்து இல்லாததால் ஏற்பட்ட பொருட்பிழை இது. கொஞ்சம் விளக்கமாகக் காண்போமா?

"நிலை" எனும் சொல் வினைச்சொல்லாக வரும்போது, நீண்ட காலத்திற்கு நீடித்து அமைதலைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக: இந்த ஆட்சி நிலைக்கும்.

"நிலை" பெயர்ச்சொல்லாக வரும்போது "இருக்கும் தன்மை"யைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக ஒரு சொற்றொடர் பார்ப்போம்:

"இப்போது அவர்நிலை தலைகீழாக மாறிவிட்டது."

பாடு எனும் சொல்லைக்கொண்டு "பாட்டுப் பாடு" என்று சொல்லலாம். அவர் பட்ட பாடு "பெரும்பாடு" என்று சொல்லலாம். "பாடுபட்டு"த் தேடிய சொத்து என்று சொல்லலாம்.

விடு = வீடு, கெடு = கேடு என்பதுபோலப் படு = பாடு.


நிலைபாடு என்பது குறிப்பிட்ட நிலையைப் பற்றி பாட்டுப்பாடு அல்லது கவிதை பாடு என்று பொருள்படும். நிலைப்பாடு என்பதுதான் நிலைமை, உறுதிப்பாடு எனும் பொருள்களைத் தரும்.

மேலே நாம் பார்த்த "குழுவினரின் நிலைப்பாடு" என்பது ஒரு காரியத்தில் அவர்களின் நிலையைச் (stand) சொல்கிறது. அதை வலிமிகாமல் "நிலைபாடு" என்று குறிப்பிட்டது தவறு.

நிலைபாடு = நிலையைப் பாடு

நிலைப்பாடு = உறுதிநிலை (stand)

# ஜீன்ஸ்



ஜீன்ஸ் என்கிற முரட்டுக் காற்சட்டைகள் அறிமுகமாகி, நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. நாளாக நாளாக அந்தக் காற்சட்டைகளுக்கான மவுசு கூடுகிறதே தவிர, குறையவில்லை.

வாலிப முறுக்கின் சின்னம் என்று ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் நினைக்கிறார்கள். ஏனைய உடைகளை அணிபவர்களை விட, ஜீன்ஸ் அணியும் பெண்களிடம், ஒரு விசேட ஆளுமைத் தன்மை வெளிப்படுவதாகப் பலர் கருதுகிறார்கள்.

ஜீன்ஸ் தயாரிக்கப்படும் துணியின் பெயர் டெனிம். பிரான்ஸ் நாட்டில் ஒரு நகரின் பெயர் நைம்ஸ். இங்குதான் பருத்தி இழை கொண்டு இத்துணி நெய்யப்பட்டு, பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டது.

நைம்ஸ் என்பதை, பிரெஞ்ச் மொழியில், "டி-நைம்ஸ்" என்பர். இதுவே, சுருங்கி, டெனிம் என்று ஆகிவிட்டது...

டெனிம் துணிகளை, வட அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, ஜெனோவா நகரில் ஓர் அலுவலகம் செயல்பட்டது. இந்த ஜெனோவா என்ற சொல்லிலிருந்தே, டெனிம் துணிகளுக்கு ஜீன்ஸ் என்ற பெயர் ஏற்பட்டது. ஜீன்ஸைக் கண்டுபிடித்தவர், ஒரு ஜெர்மானியர்!


டெனிம் துணிகள் முரட்டுத் தன்மைக்குப் பெயர் பெற்றவை. அமெரிக்காவைக் கண்டுபிடிக்க, கொலம்பஸ் சென்ற போது, அவர் சென்ற கப்பலில், இந்த டெனிம் துணி தான், பாய்களாகப் பயன்படுத்தப்பட்டன.

தங்கத்தைத் தேடி அலைந்த அமெரிக்கர்கள் சிலர், ஆங்காங்கே கூடாரம் அமைத்துத் தங்க, இந்தத் துணியையே பயன்படுத்தினார்கள்... அத்துடன், அவர்கள் ஓட்டிச் செல்லும் வண்டிகளை மூடவும் இது பயன்பட்டது.

சுரங்கத் தொழிலாளிகள், கடும் உழைப்பினால், அவர்கள் அணியும் காற்சட்டைகள் சீக்கிரமாகக் கிழிந்து விடுகின்றன என்பதால், முரட்டு டெனிம் துணியில், காற்சட்டைகள் தைத்து அணியத் தொடங்கினார்கள்.

அவை தரம் வாய்ந்ததாகவும், நீடித்து உழைப்பவையாகவும் இருந்ததால், இந்தக் காற்சட்டைகளுக்கு, தொழிலாளர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. பிறகு, இளைஞர்களும், இதை நவநாகரீக உடையாக விரும்ப ஆரம்பித்தார்கள்.

இந்த ஜீன்ஸ்கள், 1873ல் வடிவமைக்கப்பட்டு, உரிய முறையில் பதிவு செய்யப்பட்டது. அறிமுகமான சூட்டோடு, ஜீன்ஸ் விற்பனையும் சூடு பிடித்துக் கொண்டது. இருப்பினும், அமெரிக்காவில் கொடிகட்டிப் பறந்த ஜீன்ஸ், ஐரோப்பாவுக்கு வர, 50 ஆண்டுகள் பிடித்தன.



முன்னேறிய நாடுகள் அனைத்திலும், 1970ல் ஜீன்ஸ் முக்கிய ஆடையாகக் கருதப்பட்டது.

இலங்கையில் ஜீன்ஸ் உடைகளுக்கு, இன்றும் அமோக வரவேற்பு உள்ளது. இதன் பிறகு வந்த டெர்லின், ஸ்பன், பொலியெஸ்டர் எல்லாம் கூட, மதிப்பிழந்து விட்டன. காலத்தை வென்று நிற்கும் துணி, ஜீன்ஸ் தான்.

# தமிழ் சினிமாவின் அறிவாளிகள்

தமிழ் சினிமாவின் சிறப்பு, பாடல்கள். பாடல்கள் என்றால் அதன் சிறப்புக்குரிய வர்கள் பாடலாசிரியர்கள் அல்ல, இசையமைப்பாளர்கள்.

தியாகராஜ பாகவதர் காலத்திலிருந்து சுப்பராமன், ஜி. ராமநாதன், சுப்பையா நாயுடு, கே.வி. மகாதேவன், ராஜேஸ்வரராவ், சுதர்சனம், ஏ.எம். ராஜா, சி.ராமச்சந்திரா (வஞ்சிக்கோட்டை வாலிபன்) விஸ்வநாதன்-ராமமூர்த்தி, ஆர். கோவர்த்தனம், மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன், இசைஞானி இளையராஜா.



பாடாவதி படங்களின் கதைகளைத் தாண்டி, அதன் கதாநாயகர்களின் பிம்பங்களை உடைத்து, இன்னும் உயிர்ப்புடன் இருப்பது இந்த இசைமேதைகளின் பாடல்கள்தான். இன்றைக்கு அந்தப் படங்களின் கதாநாயகர்களாக உயர்ந்து நிற்பவர்கள் இசையமைப்பாளர்கள் மட்டும்தான்.

தமிழ் சினிமாவின் அறிவாளிகள் என்றால், இவர்களைத்தான் நான் சொல்வேன். இவர்கள் இசையமைத்த பாடல்கள் அப்போது வெளியான காலத்தைவிடவும், இப்போதுதான் அதன் சிறப்புகள், இனிமைகள் கூடுதல் கவனம் பெறுகிறது.

கர்நாடக சங்கீதத்திற்கு இருக்கிற ஒரு 'கிளாசிக்கல் அந்தஸ்தை' தகர்த்து, இந்த மேதைகள் இசையமைத்த தமிழ் சினிமா பாடல்கள் அந்த இடத்தை கைப்பற்றும். கைப்பற்றிக் கொண்டிருக்கிறது.

பல இனிமையான பாடல்களை கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாக கொண்டே, எல்லா இசையமைப்பாளர்களும் தந்திருக்கிறார்கள். அதிலிருந்து அடுத்த கட்டம் வளர்ந்தது எம்.எஸ். விஸ்வநாதன் காலத்தில்தான்.

வாத்தியக் கருவிகளின் இனிமையை, குறிப்பாக மேற்கத்திய வாத்தியக் கருவிகளான வயலின், கிற்றார், பியானோ மற்றும் வெஸ்டேர்ன் கோரஸ் (குரலிசை) இவைகளின் பங்களிப்பை சேர்த்து குழைத்து, தமிழ் சினிமாவின் பாடல்களை கூடுதல் இனிமையாக்கியவர் எம்.எஸ். விஸ்வநாதன். ('பொன் மகள் வந்தாள்..', 'எங்கே... நிம்மதி..', 'யார் அந்த நிலவு?..', பார்த்த ஞாபகம் இல்லையோ?..', அழகிய தமிழ்மகள் இவள்...' இதுபோல் நிறைய)

தமிழ் சினிமாவின் இசையை இந்திய தரத்திற்கு உயர்த்தியவர் எம்.எஸ். விஸ்வநாதன் என்றால், அதை உலகத் தரத்திற்கு உயர்த்தியவர் இசைஞானி இளையராஜா.


நாட்டுப்புற இசை இவரின் ஊற்று என்றாலும், இவரின் உன்னதம் மேற்கத்திய கிளாசிகல். கர்நாடாக இசையோ இவரிடம் புதுமெருகு பெறும்.

எந்தப் பொறுப்பும் அற்று எடுக்கப்பட்ட ஒரு சாதாரண ரஜினி படத்திற்குக் கூட, இவரின் பின்னணி இசை உலகத் தரம் வாய்ந்த சிம்பொனியின் இசைக் கோர்வையை ஒத்து இருக்கும்.

இவரின் மெட்டுகளில் உள்ள அசாத்தியமான கற்பனை, அதன் பின்னணியில் இனிக்கும் வாத்தியக் கருவிகள், பாடல்களில் இடையில் வரும் இடையிசை (அது ஒரு உன்னத உலகம்) இப்படி ஒவ்வொரு பாடலையும், ஒரு தனி இசை ஆல்பம் போல் அவர் உருவாக்கியிருக்கிற பாடல்களைக் கேட்கும் போது, மனித மூளை இவ்வளவு ஆற்றல் உள்ளதா? என்ற வியப்புத்தான் ஏற்படுகிறது.

உலகின் அரிதான இசைஅறிஞர்களில ஒருவர்தான் இசைஞானி இளையராஜா.

இந்திய மற்றும் மேற்கத்திய கிளாசிக்கல் வாத்தியங்கள் என்று சொல்லப்படுகிற வீணை, ட்ரம்ஸ், வயலின், சித்தார், மிருதங்கம், கிட்டார், தபேலா, பியானோ மற்றும் வெஸ்டன் கோரஸ் (குரலிசை) இவைகளை எந்தத் தரத்தில் உபயோகப்படுத்தினாரோ, அதற்கு கொஞ்சமும் குறைவில்லாமல் அவைகளுக்கு இணையாக நாட்டுப்புற இசைக் கருவிகளான உடுக்கை, பறை, பம்பை போன்ற தோல் வாத்தியக்



கருவிகளையும் மற்றும் கிராமிய மெட்டில் ஹம்மிங், குலவை (குரலிசை) கும்மி (கை தட்டல்) போன்றவைகளையும் பயன்படுத்தி இருக்கிறார். ('ஆயிரம் தாமரை மொட்டுக்களே..' 'உச்சிவகிந்தெடுத்து..' 'வனமெல்லாம் செண்பக பூ..' 'வாங்கோண்ணா.. அட வாங்கோண்ணா..' 'ஏரியிலே எலந்தமரம்.. தங்கச்சி வைச்ச மரம்..' இப்படி பல பாடல்கள்.)

கர்நாடக மற்றும் இந்துஸ்தானிக்கு பயன்படுத்தப்படுகிற தபேலா, மிருதங்கம் போன்ற தோல் வாத்தியக் கருவிகள எழுப்புகிற தாளத்தை, பறை, உடுக்கையிலும் எழுப்பி இவைகளை விட அவைகள் உயர்ந்ததில்லை என்றும் நிரூபித்திருக்கிறார்.

நாட்டுப்புற இசையை, கிராமிய சூழலுக்கு மட்டும் பயன்படுத்தாமல், மற்ற இசைகளைப் போல் பொதுதளத்திலும் பயன்படுத்தியது அவர் சாதனைகளில் மிக முக்கியமான ஒன்று.


-வே. மதிமாறன்-

# ஷகீராவுக்கு குறி வைக்கும் சிம்பு...!

பிரபல பொப் பாடகி ஷகீராவை, தன்னுடைய உலக அமைதி பாடலில் பாட வைக்க சிம்பு முயற்சித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. "லூசு பெண்ணே, எவன்டி உன்ன பெத்தான்" போன்று சர்சைக்குரிய, அதேசமயம் இளையவர்களிடம் அதிக பிரபலமடைந்த பாடல்களை எழுதி வந்த சிம்பு, அதையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டுவிட்ட தனுஷின் "கொலைவெறி"யால் கலங்கிப் போயுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் போட்டியாக உலக அமைதிக்காக ஒரு பாடலை எழுதியுள்ளார். "வேர்ல்ட்-லவ்-ஆனந்தம்" என்ற பெயரில் உருவாகி வரும் இப்பாடலில் இருந்து, ஒரு பகுதி மட்டும் சமீபத்தில் வெளியானது. இந்தப் பாட்டு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பும் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.



இந்நிலையில் இந்த அல்பத்தை சிம்புவுடன் சேர்ந்து பிரபல பொப் இசைக் கலைஞர்களான அகோன் மற்றும் ரிஹானா ஆகியோர் உருவாக்கி இருந்தனர் என்று முதலில் செய்திகள் வந்தது. ஆனால் இதுகுறித்து தன்னுடைய பேஸ்புக்கில் எழுதிய சிம்பு, உலக அமைதி பாடலில் அகோன்-ரிஹானா சேர்ந்து பணியாற்றியதாக வந்த செய்தி உண்மையில்லை என்று கூறியுள்ளார். மேலும் இந்த உலக அமைதி அல்பம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டதாகவும், விரைவில் வெளிவர இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



இதனிடையே இந்த உலக அமைதி பாடலில், உலகம் முழுக்க தன்னுடைய இசையால் பல லட்சம் ரசிகர்களைக் கவர்ந்துள்ள பிரபல பொப் பாடகி ஷகீராவையும், பாட வைக்க சிம்பு முயற்சித்து வருவதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 'தீம்' பாடலான "வக்கா வக்கா" பாடலைப் பாடியிருந்தார் ஷகீரா. கொலம்பிய நாட்டைச் சேர்ந்த பாடகி இவர். தன்னுடைய "போடா போடி" படத்திலும் ஷகீராவை பாட வைக்க சிம்பு முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

# ரோபோ சிநேகிதி!




பெண் நண்பர்கள் கிடைக்காமல், அல்லாடும் இளைய தலைமுறையினரின் ஆசையை நிறைவேற்றி வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது, ஜப்பானைச் சேர்ந்த ஒரு நிறுவனம். பெண் ரோபோக்களை, இந்த நிறுவனம் தயாரித்து வருகிறது. அழகான இளம் பெண் போல் தோற்றமளிக்கும், இந்த ரோபோவுடன், ஆசை தீர பேசி மகிழலாம்.

அதற்காக, நாம் கேட்பதற்கு எல்லாம், இந்த ரோபோ பதில் அளிக்கும் என எதிர்பார்க்காதீர்கள். அதில், பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட, கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்கும். பேசும் போது, இந்த பெண் ரோபோவின் முகத்தில், அதற்கேற்ற முக பாவங்களும் இருக்கும்படி, தொழில்நுட்ப வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த ரோபோவை தயாரிக்கும் பணி, இன்னும் முடிவடையவில்லை. இது என்ன விலைக்கு கிடைக்கும் என்ற விவரமும் வெளியிடப்படவில்லை.

"பெண் நண்பர்கள் கிடைக்காமல், விரக்தியுடன் தனிமையில் பொழுதை கழிக்கும் ஆண்களின் மகிழ்ச்சிக்காக, இந்த ரோபோவை தயாரித்து வருகிறோம். இன்னும் ஒரு சில ஆண்டுகளில் விற்பனைக்கு வரும்..." என்கின்றனர், இதை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்.

# கப்பிக் கல்

ரஷ்யக் கதை



அந்த நகரத்தில் கப்பிக் கற்களால் போடப்பட்ட வீதி ஒன்று இருந்தது. அதன்மேல் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒருநாள் ஒரு கப்பிக் கல்லைப் பெயர்த்து உருட்டிவிட்டுப் போய்விட்டது. அந்தக் கப்பிக்கல் தனக்குள் சொல்லிக் கொண்டது:

"என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டு, நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்". தெருவோடு போன ஒரு சிறுவன் அந்தக் கல்லைத் தன் கையில் தூக்கிக் கொண்டு நடந்தான். இப்போது கல் தனக்குள் எண்ணிக் கொண்டது.

"ஆஹா.. நான் பிரயாணம் செய்ய விரும்பினேன், இதோ பிரயாணம் செய்கிறேன்... எதையும் தீவிரமாக விரும்பினால் போதும், விரும்பியபடி நடக்கும்..."

கையில் எடுத்த கல்லை, ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் சிறுவன். "ஹா! நான் பறக்க விரும்பினேன். பறக்கிறேன்... என் விருப்பம் போலவே நடக்கிறது எல்லாம்..."

என்று சொல்லிக் கொண்டு பறந்தது கல். அந்த வீட்டின் ஒரு ஜன்னல் கண்ணாடியில் "டண்" என்று போய்க் கல் மோதியது. கண்ணாடிக் கதவு உடைந்து விட்டது. உடையும்போது கண்ணாடி சொல்லியது "போக்கிரிக் கல்லே! நீ என்னடா செய்கிறாய்"? அதற்குக் கப்பிக் கல் பின்வருமாறு பதிலளித்தது.

"நான் வரும் வழியில் எதற்கு நிற்கிறாய்?" என் வழியை விட்டு விலகிக் கொள்வதற்கென்ன? என் வழியை மறிப்பவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. என் வசதிக்காகத்தானே எல்லாம் இருக்கிறது! என் வாழ்க்கை வழி அதுதான்.... என் இஷ்டப்படிதான் போவேன்..." என்று சொல்லிக் கொண்டே வீட்டில் அறைக்குள்ளிருந்த ஓர் மெத்தையில் போய் விழுந்தது அந்தக் கல்.

"இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததும், சுற்றி அலைந்ததும் எனக்கு அலுப்பாக இருக்கிறது. சற்று நேரம் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்கிறேன்" என்று கட்டிலில் கிடந்தபடியே எண்ணிற்று கல்.

அந்த வீட்டு வேலைக்காரன் வந்தான். படுக்கையில் கல் கிடப்பதைப் பார்த்தான். அதை எடுத்து ஜன்னல் வழியாகத் திரும்பவம் தெருவிலே தூக்கி எறிந்து விட்டான்.

அந்தக் கல் மீண்டும் தெருவிலிருந்த ஏனைய கப்பிக் கல்லுகளோடு வந்து சேர்ந்தது. சகோதரக் கப்பிக் கற்களைப் பார்த்து அந்தக் கல் கூறியது:

"சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது தான் பெரிய மனிதர் ஒருவரைப் பார்க்க, அவரது மாளிகைக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்திருக்கிறேன். பெரிய மனிதர்களையும், பணக்காரர்களையம் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம் தான எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும், மரியாதையும் இருக்கிறது. அதனால் நான் திரும்பி வந்து விட்டேன்".

-பெடோர் ஸோலோகம்-

# இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

## ஐ.தே.க.பொதுச் செயலர்



(கொழும்பு) இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி அளித்த வாக்குறுதி இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை. 13ஆம் திருத்தச் சட்டத்தைத் தாண்டிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்குப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் காலம் தாழ்த்துவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்குப் பிரச்சினைக்கு நம்பகரமான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். எனினும், இந்தத் தீர்வுத்திட்டம் நாட்டின் அரசியல் யாப்பிற்கு அமைவானதாக இருக்க வேண்டும். அனைத்து இன மக்களினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் அமைய வேண்டும்.

அரசாங்கம் சர்வதேசத்தில் ஒரு நிலைப்பாட்டையும் உள்நாட்டில் மற்றோர் நிலைப்பாட்டையும் வெளியிட்டு வருகின்றமை ஆபத்தானது என்றாா.

# தாய்நாட்டின் மீதான அன்பை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது

(கொழும்பு)

அறிவு மற்றும் விஞ்ஞானத்தின் ஊடாக முன்னோக்கிச் செல்லும் தாய்நாடு மீதான அன்பு மற்றும் நாட்டுப்பற்றை ஒருபோதும் மறக்கக் கூடாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது தெரிவித்துள்ளார்.

தாதியர் பயிற்சி பெற்ற இரண்டாயிரத்து 500 இளைஞர்- யுவதிகளை சேவையில் இணைத்துக கொள்ளும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.



இதன் போது தாதியர் சேவையில் பயிற்சிகளைப் பெற்ற குழுவினர்களில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 30 இளைஞர், யுவதிகளுக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

தாதியர் சேவை, தொழில் ரீதியானது என்பதை விடவும் மிகவும் கௌரவமான ஒரு சமூக சேவை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நோய்வாய்ப்பட்டவரை குணப்படுத்தும் சக்தியைக் கொண்ட தாதியர் புன்சிரிப்புடன் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை; தனியார் பஸ் உரிமையாளர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்திற்கு அமைவாக பஸ் கட்டணங்களை அதிகரிக்க அரசாங்கம் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக பெரும் நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மானியம் அல்லது பஸ் கட்டண உயர்வை வழங்குவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

தமது பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் இழுபறி நிலை காணப்படுகிறது. நாளாந்தம் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே பஸ் சேவைகளை முன்னெடுக்க நேரிட்டுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான யோசனைகளை மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு தனியார் போக்குவரத்து அமைச்சின செயலாளரிடம் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் எரிபொருள் விலையேற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து ஆராய்வதற்காக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அதன் பணிப்பாளர் சபையை அவசரமாக கூட்டியுள்ளது.

இந்தக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் எனச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்கா தெரிவிக்கையில், தனியார் பஸ் சங்கங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே இருப்பதாக கூறினார்.

# ஜேர்மன் பிரஜை கடலில் மூழ்கி பலி

(கொழும்பு)

காலி-ஹிக்கடுவை பிரதேச கடலில் நீராடிக் கொண்டிருந்த சுற்றுலாப் பயணியான ஜேர்மன் நாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கிய குறித்த நபர் மீட்கப்பட்டு காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஹிக்கடுவைப் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஜேர்மன் நாட்டுப் பிரஜையே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலை. அதிகாரத்தை கைப்பற்றும் போராட்டங்கள் வழக்கமானவையே



(கொழும்பு) பல்கலைக்கழகத்தின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நடத்தப்படும் போராட்டங்கள் வழக்கமானவையே என கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடொன்றினுள் உருவாகும் சிறந்த மாணவர்களே பல்கலைகழகங்களுக்கு வருகின்றனர். அவர்கள் அங்கிருந்து வெளியேறியதன் பின்னர் வேலையொன்றைத் தேடிக்கொள்ள முடியாமற் போகும்போது அவர்களை தூற்றுவதில் எவ்வித பயனும் இல்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சர் என்ற வகையில் இதற்கு நாமே பொறுப்புக்கூற வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் விரிவுரையாளர்களை மாற்றுவதற்கு தயாராக வேண்டுமெனவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியலில் குருகுலம் சிறுவர் இல்லம்

## பொது அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தை அரசியலுக்கு பயன்படுத்தி வரும் செயலுக்கு களுதாவளை பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டன அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

'களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தை அரசியலுக்குப் பயன்படுத்துவதை வண்மையாகக் கண்டிக்கின்றோம்' எனும் தலைப்பில் களுதாவளை பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு களுதாவளையில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட திருஞானசம்பந்தர் குருகுலம் தற்போது அரசியல் நடாத்தும் இடமாக மாறியிருக்கின்றது.

அண்மைக் காலமாக களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்திலிருந்து அனுப்பப்படுகின்ற கடிதங்கள் அனைத்தும் அனுப்புனர் முகவரி பொன்.செல்வராசா நாடாளுமன்ற உறுப்பினர் என்று அனுப்பப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிர்வாக சபை பொதுக் கூட்டத்திற்கான அழைப்பினையும் செல்வராசாவின் முகவரி இட்டே அனுப்பப்பட்டிருக்கின்றன. 500 பேருக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர். அனைவருக்கும் அனுப்பப்பட்ட கடிதங்களிலும் அனுப்புனர் முகவரி பொன் செல்வராசாவின் முகவரி இடப்பட்டிருக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் பாரிய எதிர்ப்பலைகள் உருவாகி இருக்கின்றன.

களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தில் தாய் தந்தையரை இழந்த பல சிறுவர்கள் தங்கியிருந்து தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்குருகுலம் ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்கள் ஆகின்றன இக்குருகுலம் மூலம் கஷ்டத்தின் மத்தியில் தமது கல்வியைத் தொடர முடியாமல் இருந்த பல சிறார்கள் நல்ல நிலைக்கு வந்திருக்கின்றனர். இக்குருகுலத்தினால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் இன்று பல உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

ஆனாலும் தற்போது இக் குருகுலத்தில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் இங்கு தற்போது இருக்கின்ற சிறார்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன், இக்குருகுலம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்திலிருந்து விலகிச் செல்வதாக அமைந்திருக்கின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முறியடிப்பு

(கொழும்பு)

காலி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் கைதியொருவரும் நேற்றுமுன்தினம் காலை தப்பிச் செல்ல மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரி ஒருவரைத் தாக்கிவிட்டு அவர்கள் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டப்ளியூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தப்பிச் செல்ல முயற்சித்த கைதிகளைத் தடுப்பதற்கு அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியின் போது காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# புதையல் தோண்டியோர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

மொரகஹஹென- கோனகல பிரதேசத்தில ஹனியன்கல பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரகஹஹென பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது அவர்கள் கைது செய்யபட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அவர்கள் நேற்றைமுன்தினம் ஹொரன நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.



காலி இலக்கிய விழாவில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இவ்விழா நேற்றுமுன்தினம் வரை இடம்பெற்றது.

# தீர்வு முயற்சியைத் தொடர்வதே தமிழினத்தின் இன்றைய தேவை

## கூட்டமைப்பு எம்.பி.சுமந்திரன்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் செயற்படும் கனடிய அரசின் செயற்பாடு எங்களின் மக்களிற்குப் பெரிய நம்பிக்கையையும் பேரெழுச்சியையும் தருகிறது. வெற்றியோ தோல்வியோ தீர்வுக்கான முயற்சிகளைத் தொடர்வதே தமிழினத்தின் இன்றைய தேவை என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

இளைய வயது இராணுவத்தினர் வடக்கு-கிழக்கு எங்கும் நிலைகொண்டுள்ளார்கள். அவர்கள் தமிழ் பால்ய வயதுப் பெண்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நிலை சாதாரணமாக வந்திருக்கிறது. இந்தவிடயத்தைத் தாங்கள் அரசின் உயர்பீடத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது, அப்படியேதும் நடந்தால அந்த இராணுவத்தினர் மேற்படி பெண்களைத் திருமணம் செய்ய வேண்டும் என இராணுவத் தளபதி கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவித்தனர். தமிழ இனச்சுத்திகரிப்பிற்கு இதை விடச் சிறந்த உதாரணம் இருக்க முடியாது.

உலக வரலாற்றில் போரின் முடிவுகளிலெல்லாம் வெற்றி பெறும் தரப்பு முழுவதையுமே அபகரித்து அனுபவிப்பதும் தோற்றுப்போன தரப்பு அனைத்தையுமே இழப்பது தான் வழக்கம்.

பெரும்பான்மையினரிடையே இனப்பிரச்சினை தொடர்பான உண்மையான தரவுகள் தன்மைகள் சென்றுவிடாமல் ஆயுதப் போரும் அதன் பின்னரான அகிம்சைப் போரும் ஒன்றேயென்ற எண்ணமும், தமிழர்களிற்கு ஏன் உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணமும் நிலைத்து நிற்கிறது.

இப்போது இடம்பெறும் பேச்சுக்களைப் பற்றி பலரும் பலவாறாகப் பேசுகிறார்கள். ஆனால யதார்த்தின்படி இந்தப் பேச்சில் தொடர்ந்தும் நிலைத்து நின்றாலேயே தமிழர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதோடு, இன்று வரையுமான பேச்சுக்களில் அரசு பல தடவைகள் மறுத்துப் பேச்சுக்கள் தடைப்பட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்களை அரசு தரப்பு ஏற்றதால் மாத்திரமே பேச்சு இழுபட்டபடி தொடர்கிறது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கிப் போகவில்லை என்றும் குறிப்பிட்டார்.



நுளம்பு வாரத்தையொட்டி நவாலி-அரசடி மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலை முன்பகுதியில் உள்ள புல்லுகளை வெட்டி டெங்கு ஒழிப்புச் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (104)

# புதிய தொழில்நுட்பம் காரணமாக விவசாயிகளுக்கு தொற்றாத நோய்

(கொழும்பு)

தற்போது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்படும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவைப் பகுதியில் பிராந்திய அலுவலகங்கள் மூன்றைத் திறந்து வைப்பதற்காக இடம்பெற்ற நிகழ்வின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



சிகரெட் பாவனை, சீனி மற்றும் வெங்காயம் போன்றவற்றை உணவில் கூடுதலாகச் சேர்த்தல் இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றது. கடந்த காலங்களில் விவசாயிகள் வயல்களில் இறங்கி கடினமாக உழைத்தனர். தற்போது நவீன தொழிநுட்பப் பாவனையால் இதற்கான சந்தர்ப்பம் குறைவடைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தமது குருத்துவ பொன்விழா நிகழ்வை கடந்த 11ஆம் திகதி கொண்டாடினார்.

இதன்போது பேராலய மேய்ப்புப்பணிச் சபையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (21)

# மன்னாரில் வாழ்வெழுச்சிக் கண்காட்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் "திவிநெகும" வாழ்வெழுச்சிக் கண்காட்சியின் நிறைவு நாளான நேற்றுமுன்தினம் அதிகளவான மக்கள் கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

சனிக்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சியை பார்வையிடுவதற்காக எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்ததாக கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் சென்.சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலையில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் 40 மேற்பட்ட நிறுவனங்கள் தமது காட்சிக்கூடங்களை அமைத்திருந்தன.



நேற்றுமுன்தினம் இக்கண்காட்சியினை அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆரம்பித்து வைத்தார். வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி செயலகத்தில் இன்று டெங்கு ஒழிப்பு செயலணி

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் டெங்கு ஒழிப்பு செயலணி இன்று மீண்டும் கூடவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித்த மகிபால தெரிவித்துள்ளார்.

இதன்போது நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

டெங்கு ஒழிப்புத் திட்டங்களுக்காக அரசாங்கம் இந்த வருடம் 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடம் 28,140 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததுடன், 185 பேர் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிடுகின்றது.

# பாதாள உலகக் குழுக்களை இல்லாதொழிக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)


பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் உத்தரவின் அடிப்படையில் நாடு முழுவதிலும் பதுங்கியிருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களைக் கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பைப் பேணும் நபர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதனைத் தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக கடல் வழியாகச் செல்லக் கூடிய வாய்ப்புக்களை முடக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விசேட அதிரடிப்படை, பொலிஸ், முப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட நாட்டின் சகல பாதுகாப்புத் தரபபினரினதும் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அரசியல்வாதிகளோ அல்லது ஏனைய தரப்பினரோ பாதாள உலகக் குழுக்களுக்கு ஆதரவளித்தால், அவர்களுக்கும் தண்டனை விதிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.



நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தினால் பொங்கல் திருநாளையொட்டி 100 அங்கத்தவர்களுக்குப் பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டன.

இப்பொருட்களை அமரர்களான அருள்மலர், அருள்சோதிரத்தினம், செல்லையா ஆகியோரின் ஞாபகார்த்தமாக உறவினர் ஒருவர் முதியோர் ஒருவருக்கு வழங்குவதைக் காணலாம். (104)

## வாகன அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கான திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரம் பெறுவோர் தொகை குறைந்துள்ளது.

இவ் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக அதிகாலையில் வந்தே வாகனச் சொந்தக்காரர் காவல் இருப்பர். இவர்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது மார்ச் 31ஆம் திகதி வரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து மக்கள் முண்டியக்காமல் ஆறுதலாக வந்து பெற்றுச் செல்கின்றனர்.

இவ் அனுமதிப்பத்திரத்தை இதுவரை மூவாயிரம் பேர் பெற்றுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## மாணிக்கக்கல் அகழ்ந்த 23 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இரத்தினபுரி-நிவித்திகல கரவிட்ட ஆற்றில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் சுற்றிவளைப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புப் பெறப்பட்டுள்ளது.

மாணிக்கக்கல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் இதன்போது அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபை மூன்று இலட்சத்து ஆறாயிரம் ரூபா அபராதத்தை அறவிட்டுள்ளது.

# ஈரானை அழிக்க விரும்புகிறது அமெரிக்கா!

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் (குறிப்பாக இஸ்ரேல்) ஈரானை சுற்றி வளைத்து வருகின்றன. ஈரான் மத்திய வங்கியுடன் எந்த வர்த்தக நடவடிககைகளையும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மேற்கொள்வதை தடைசெய்து அமெரிக்காவின் செனட் ஒருமனதாக (100-0) தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தொடர்ந்து அவ்வப்போது ஈரான் மீது தடைகளை விதித்துவரும் அமெரிக்க அரசாங்கத்தின் சமீபத்திய தடையானது மிகவும் கடுமையான ஒன்று.



இந்தச் சட்டத்தைப் பற்றி வெள்ளை மாளிகையின் வலைதளத்தில் ஒபாமா வெளியிட்டுள்ள குறிப்பில் "இராணுவம்" என்ற வார்த்தை 14 முறையும் "பாதுகாப்பு" என்ற வார்த்தை 9 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சடடத்தின் நோக்கம் என்ன என்பதை இது காட்டுகிறது! மேலும், இதுவரை ஈரான் மீது 15 தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

662 பில்லியன் டொலர் முதலீட்டுடன் தேசிய பாதுகாப்பு அங்கீகார சட்டத்தை ஒபாமா நிறைவேற்றியுள்ளார். இதன் மூலம் ஈரானின் இராணுவ பலம் பற்றி மதிப்பீடு செய்யப்படும். ஈரான்மீது போர் தொடுக்க அமெரிக்கா முடிவு செய்யும் பட்சத்தில் இந்தச் சட்டம் மிகுந்த முக்கியத்துவம் பெறும். இந்த சட்டத்தின் மிக முக்கியமான நோக்கம் நேட்டோ நாடுகளின் ஆற்றல் தேவையை உறுதி செய்வதே.

இந்தச் சட்டத்தின்படி ஈரான் மத்திய வங்கியுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் எநதவொரு மூன்றாவது நாட்டின் மீதும் அமெரிக்காவால் அபராதம் விதிக்க முடியும்! அமெரிக்க நிர்வாகமே வெளிபபடையாக கூறியுள்ளதைப் போல இந்தத் தடையின் முக்கிய நோக்கமே ஈரானின் வருவாயை முடக்கி, அங்கு நிதிப் பற்றாக்குறையை உருவாக்கி அதனால் தனது அணுசக்தி திட்டத்தை தொடர முடியாதபடி செய்வதேயாகும். ஆனால், இந்தக் காரணம் முட்டாள்தனமானதும், சிறுபிள்ளைத்தனமானதும் ஆகும்.

வடகொரியா போன்ற மிகவும் வறுமையான நாடுகள் மீது பல தடைகள் விதித்தும் அவை அணு ஆயுதங்களைத் தயாரிப்பதை தடுத்துநிறுத்த முடியாத அமெரிக்கா, எப்படி ஈரானை தடுத்துநிறுத்த முடியும்? 1990 களில் ஈராக் விவகாரத்தில் ஏற்பட்ட நிலையே இப்போதும் ஏற்படக்கூடும். ஈராக்கை அழிப்பதில் தடைகள் தோல்வியுற்ற நிலையில், அமெரிக்கா ஈராக்மீது போர் தொடுத்தது. அதேதான் இப்போதும் நடக்கும்.

ஈரானை அமெரிக்கா குறிவைப்பது இது முதல் முறையல்ல. ஜூன் 9, 2010 இல் ஒபாமா நிர்வாகம் ஈரான் மீது பல கடும் தடைகளை விதித்தது. முக்கியமான இராணுவக் கருவி ஒன்றை ஈரானுக்கு ஏற்றுமதி செய்வதை தடை செய்ததுடன், ஈரானின் நிறுவனங்களுடன் சர்வதேச நிதி மற்றும் சொத்துப் பரிமாற்றங்களைத் தடை செய்தது. இந்தப் பகுதியில் அமெரிக்காவால் குறி வைக்கப்பட்டிருப்பது ஈரான் மட்டுமல்ல.

1986 லிருந்தே நேட்டோவின் கோபத்திற்கு ஆளான நாடாக இருக்கிறது சிரியா. ஒன்றரை மாதத்திற்கு முன்னர் கலகக்காரர்களுக்கு எதிராக சிரியா அரசாங்கம் எடுத்த ஒடுக்குமுறை நடவடிக்கைகளை கண்டித்து ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் பழைய தடைகளைப் புதுப்பித்ததுடன் புதிய தடைகளை விதித்தன. ஆனால் இதே போன்று கலகக்காரர்களை ஒடுக்கிய ஏமன் மற்றும் பஹ்ரைன் நாடுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை!

தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி, தான் குறி வைக்கும் நாடுகள்மீது தடைகளை விதித்து அவற்றை பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக பலவீனமாக்கி பின்னர் அவற்றின்மீது போர் தொடுப்பதை தனது வழக்கமாக அமெரிக்கா வைத்துள்ளது.

ஈரானின் விடயத்தில் அதன் அணு சக்தி தவறான வழியில் பயன்படுத்தப்படும் என்று காட்டுவதற்கு அமெரிக்காவிடம் எந்த ஆதாரமும் இல்லை (சர்வ தேச அணு சக்திக் கழகத்தின் அறிக்கையும் ஈரானுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என்று கூறிவிட்டது). பேரழிவு ஆயுதங்கள் ஏதும் ஈரானிடம் இருப்பதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக தான் சொன்னதற்காக அமெரிக்கா மன்னிப்புக் கேட்டதுடன் ஈராக் கதை முடிந்தது.

9/11 தாக்குதலைப் பொறுத்த வரை அதில் ஈடுபட்டவர்கள் சவூதி அரேபியா மற்றும் பாகிஸ்தானை சேரந்தவர்கள். பல தீவிரவாதக் குழுககளுக்கு அடைக்கலம் தந்திருக்கும் பாகிஸ்தான் வெட்கங்கெட்ட வகையில ஒசாமா பின்லேடனுக்கும் அடைக்கலம் தந்திருந்தது. ஆனால் ஈரான் போன்ற நாடுகள் எதிர்கொண்டுள்ள தடை களை சவூதியும் பாகிஸ்தானும் எதிர் கொள்ளாதது ஏன்? அவை வார்த்தைக்கு வார்த்தை அமெரிக்காவின் உத்தரவு களை அப்படியே ஏற்பதுதான் கார ணம். தலிபானைப் பொறுத்த வரை அது அமெரிககாவால் உருவாக்கப்பட்ட ஒன்று.

கியூபா மீது தடைகள் விதிக்கப்பட்டு 50 ஆண்டுகளாகின்றன. ஆனால் அவை "பலனற்றவை" என்று ஒபாமாவே 2010 இல் கூறினார். பாகிஸ்தானும், இராணுவ விடயத்தில் அமெரிக்கரவின் தடையை எதிர்கொண்டிருந்தது (1990லிருந்து 2005 வரை 15 ஆண்டுகளுக்கு எப்ரூ16 ரக போர் விமானங்கள் பாகிஸ்தானுக்கு விற்கப்படுவதற்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது). ஆனால் பாகிஸ்தான் வேறு நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் வாங்குவதை இந்தத் தடையால் தடுக்க முடியவில்லை.

இதேபோன்று பல சமயங்களில் தடைகள் அதன் நோக்கங்களுக்கு நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. தென்னாபிரிக்கா மீது விதிக்கப்பட்ட ஆயுதத் தடைகளை (1960களின் போது) எதிர்கொள்ள அப்போதைய பிரிட்டோரியா அரசாங்கம் உள்நாட்டிலேயே பெருமளவு ஆயுதங்களை தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவியது. யூகோஸ்லாவியாவிற்கு எதிரான தடைகளால் போஸ்னியா போரை தடுக்க முடியவில்லை என்பதுடன், தடைகள் அந்நாட்டை வறுமையில் தள்ளின.

கியூபா, ஈரான், சிம்பாப்வே மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளுக்கு எதிரான தடைகள அந்த அரசாங்கங்களுக்கு நெருக்கடிகளை தருவதற்கு பதிலாக, வறுமையால் பீடிக்கப்பட்டிருந்த அந்நாட்டு மக்களின் துயரங்களை மேலும் அதிகமாக்கின. உலகின் எந்த நாட்டிலும் தடைகளால் அரசுகள் தூக்கியெறியப்பட்டதில்லை. அது மிலோசோவிக்கின் யு,கோஸ்லாவியாவானாலும் சரி, சதாம் ஹுசைனின் ஈராக்கானாலும் சரி அல்லது தலிபானின் ஆப்கானிஸ்தானானாலும் சரி.

இறுதியில் தங்களது நோக்கத்தை நிறைவேற்ற நேட்டோ இராணுவத்தையே நம்பியது. ஏற்கனவே கூறியது போல இந்தத் தடைகளுக்கு பலியாகிறவர்கள் சாதாரண, அப்பாவி மக்களே. 1991லிருந்து 2001 வரை விதிக்கப்பட்ட தடைகளால் ஏறக்குறைய பத்து இலட்சம் ஈராக்கியர்கள் மடிந்தனர். எந்த அரசுகளுக்கு எதிராக தடைகள் விதிக்கபபடுகின்றனவோ அவை பெரும்பாலும் ஊழல், களளச் சந்தை, சட்டத்திற்கு புறம்பான ஆயுத வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் மேலும் மேலும் வலிமையடைவது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

வட ஆபிரிக்காவில் உள்ள எண்ணை வளம் மிகுந்த நாடுகளான கொங்கோ, அங்கோலா, சுவாஸிலேண்ட், சோமாலியா ஆகிய சர்வாதிகார நாடுகளைப் பற்றி அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும். கண்டுகொள்வதேயில்லை. ஏனெனில் அமெரிக்காவின் வர்த்தக நலன்கள் இந்நாடுகளின் பெட்ரோல் வளத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதே.

தடைகள் விதிக்கப்படுவதால் எதிர் பார்க்கப்படும் பலன்கள் எப்போதும் கிடைத்ததில்லை. தடைகள் விதிக்கப்படுவது என்பது கி.மு.431 இல் ஏதென்ஸ் நாடு மேகர் என்ற நாட்டின் மீது தடை விதித்த போதே தொடங்கிவிட்டது. 2003ஆம் ஆண்டு இன்டர்நேஷனல் எகனாமிக்ஸ் நடத்திய ஆய்வில் உலக அளவில் தடைகள் 33 சதவிகிதமே பலன் தந்திருப்பதாக தெரியவந்துள்ளது. 2010 இல் தனது ஆய்வை விரிவுபடுத்திய அந்த நிறுவனம், 1970 முதல் 1997 வரை அமெரிக்கா தான் விதித்த தடைகள் மூலம் 13 சதவிகித வெற்றியையே பெற்றிருப்பதாக தெரிவித்துள்ளது.

இப்போது ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் ஈரானை மட்டுமல்லாது பிற நாடுகளையும் பாதிக்கப்போகிறது. சீனா, இந்தியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் பெட்ரோல் பற்றாக்குறையால் பாதிக்கப்படப் போகின்றன. ஈரானின் ஆண்டு பட்ஜெட்டில் பாதி பெட்ரோல் வருவாயை சார்ந்திருக்கிறது. ஜூலை 2011 வரை பெட்ரோல் மூலம் ஈரான் ஈட்டிய வருவாய் 56 பில்லியன் டொலர் என அமெரிக்க ஆற்றல்துறை தெரிவிக்கிறது.

ஈரான் விடயத்தில் அமெரிக்கா காட்டும் அக்கறை முழுக்க முழுக்க பெட்ரோல் தொடர்பானதே. அதற்காகவே அங்கு ஆட்சி மாற்றம் வர வேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. தன்னால் ஆட்டுவிக்கப்படும் பொம்மை அரசு அங்கு அமைவதன் மூலம் ஈரானின் பெட்ரோலை அமெரிக்காவிற்கு திருப்பிவிட முடியும் என்பதே இதற்குக் காரணம்.

இதுவரை ஈரான் அணு குண்டு தயாரிக்கவில்லை என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியான் பனிட்டாவே கூறியிருக்கிறார். அமெரிக்காவின் இரட்டை அளவுகோல் அணுகுமுறையை பார்க்கிற போது ஈராக்கிற்கும் ஆப்கானிஸ்தானிற்கும் ஏற்பட்ட அதே கதிதான் ஈரானுக்கும் ஏற்படும் என்பது தெரிகிறது. ஈராக்கையும் ஆப்கானிஸ்தானையும் அழித்த பிறகு ஈரானின் பெட்ரோல் வளத்தை அபகரிக்க குறிவைத்திருக்கிறது அமெரிக்கா.

மேலும், பெட்ரோல் வள நாடுகள் பெரும்பாலும் அமெரிக்காவின் கைப் பாவைகளாக இருக்கின்றன. இதற்கு ஒரே விதிவிலக்கு ஈரான் மட்டுமே. ஆனால் அமெரிக்காவின் இந்தத் திட்டம் நிறைவேறுவ்து மிகக் கடினம். ஏனெனில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ் தான் போன்ற நாடுகளோடு ஒப்பிடுகிற போது ஈரான் வலிமையான நாடு. தனது இறையாண்மையை பாதுகாத்துக்கொள்ள நேட்டோ படைகளுக்கு எதிராக ஒரு வீரஞ்செறிந்த போரை நடத்த ஈரான் தயங்காது என்பதை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும்.

போர் அல்லது ஏன் பொருளாதாரத் தடைகள் கூட அமெரிக்காவின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கும். அமெரிக்காவின் விடயத்தில் அதுதான் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போர்களுக்குப் பின்னர் நடந்தது. இத்தகைய சூழலில் தோற்கும் நாட்டை விட வெற்றி பெறும் நாடு அதிகம் இழக்கும் என்பதை ஒபாமா புரிந்துகொள்ள வேண்டும். பெட்ரோல் என்று வருகிற போது ஒபாமாவிற்கும் ஜோர்ஜ் புஷிற்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

- *அரிந்தம் சவுத்ரி*

# மாநகரசபையின் டெங்கு ஒழிப்பு





யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையினரால் யாழ். மாநகர சபைப் பகுதியில் கடந்த 16.01.2012 இலிருந்து 22.01.2012 வரை தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வார வேலைகள் திட்டமிடப்பட்டவாறு நடத்தப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத் திட்டத்தில் யாழ். மாநகராட்சிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வெளிகள உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தவர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். மாநகர சுத்திகரிப்பு பிரிவினர், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியை 7 வலயங்களாகப் பிரித்து, இந்த 7 வலயங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

இதன்படி பசார் I, பசார் II, நாவாந்துறை, கொழும்புத்துறை, குருநகர் I, குரு நகர் II, அரியாலை, வண்ணார் பண்ணை, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 7 பிரதேசங்களிலும் உள்ள 17 பகுதிகளில் டெங்கு பெரும் வகையில் காணப்பட்டதை அடுத்து, அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி நுளம்புக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாட்டின்போது, நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக இருந்த அநேக இடங்களில் அவ்வப்போதே அழிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களுக்கு அறிவித்தல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட இடங்கள் பொலிஸ் பிரிவினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக இருந்த இடங்களை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது B.T.I பக்ரீரியா, அபேற் என்ற இரசாயன பதார்த்தமும் பயன் படுததப்பட்டது.

க.ஆ.ஜீவநாதன்
பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர், உணவுப் பரிசோதகர்.
மாநகரசபை.

(தொடரும்...)

# கிரிக்கெட் "கடவுள்" சாதிப்பார் | ச்சின் சதம் அடிப்பாரா?

## மைக் ஹசி

(அடிலெய்ட்)

தற்போதைய தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் கிரிக்கெட் 'கடவுள்' சச்சின், 100ஆவது சதம் அடிப்பது தவிர்க்க முடியாதது என்கிறார் அவுஸ்ரேலிய வீரர் மைக் ஹசி.

கடந்த 10 டெஸ்ட் போட்டிகளின், 19 இன்னிங்ஸ்களாக இந்திய துடுப்பாட்ட மாஸ்டர் சச்சின் தனது, 100ஆவது சதத்தை அடிக்க முடியாமல் திணறி வருகிறார். இது குறித்து மைக் ஹசி கூறியது:

சச்சின் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார். சரியான 'புட் வொர்க்கில்' பந்தை நோக்கி துடுப்பினை கொண்டு செல்லும் திறன் ஆகியவற்றை அருகில் இருந்து பார்க்கும் போது வியப்பாக இருக்கும் நன்றாக துடுபபாட்டம் செய்ய வேண்டும் என்று அவரது மனது நினைப்பதற்கு ஏற்பட துடுப்பும் நன்கு ஒத்துழைக்கிறது.

பல நேரங்களில் நன்கு விளையாடினாலும், ஏதாவது ஒரு பந்தில், ஒரு தவறு செய்து விட்டால், பெவிலியன் திரும்ப வேண்டியது தான். தனது 100ஆவது சதத்தை, இவர் இன்னும் அடிக்கவில்லை என்றாலும், கிரிக்கெட்டின் 'கடவுள்' சச்சின் தான்.

கிரிக்கெட் ரசிகர்கள் நிறைந்த இந்தியாவில், இவர் தெருவில் இறங்கி நடந்து சென்றால், பல ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர். இவை அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பல்வேறு வகையான நெருக்கடிகளைச் சமாளித்து, தனது கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும், தொடர்ந்து சிறப்பான முறையில் ரன்கள் குவித்து, 20 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச கிரிக்கெட்டில் ஜொலித்து வருவது வியப்பாக உள்ளது.

இவர், மனதளவில் மிகவும் வலிமையானவர். சச்சின் தொடர்ந்து சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தும் பட்சத்தில், 100ஆவது



சதம் தவிரக்க முடியாதது ஆகும். ஆனால், இது வேறு தொடரில் நடக்கட்டும். இந்த டெஸடில் வேண்டாம் என்றார்.

## ஆடுகள அமைப்பாளர்

(அடிலெய்ட்)

அடிலெய்ட் மைதானம் பேட்டிங்கிற்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சச்சின் தனது 100ஆவது சதத்தை அடித்து சாதனை நிகழ்த்துவார் என ஆடுகள அமைப்பாளர் பர்டெட் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலியா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் 3 டெஸ்டில் தோற்ற இந்திய அணி தொடரை இழந்துவிட்டது. 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் அடிலெய்டில் இன்று தொடங்க உள்ளது.

இதற்காக இந்திய அணி வீரர்கள் வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். இம்முறை அடிலெய்ட் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆடுகள அமைப்பாளர் பர்டெட் அளித்த பேட்டியில், அடிலெய்ட் ஆடுகளம் முதல் 2 நாட்கள் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருக்கும். இதனால் சச்சின் இம்முறை இங்கு 100 ஆவது சதம் நிகழ்த்துவார் என நம்புகிறேன். சச்சின் சிறந்த வீரர். அவர் இங்கு சாதனை நிகழ்த்துவதைப் பார்க்க விரும்புகிறேன் என்றார்.

# திறமையை வெளிப்படுத்துவோம் இங்கிலாந்து வீரர் நம்பிக்கை



பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தமது அணி வழமையான திறமையை வெளிப்படுத்தும் என இலங்கிலாந்து அணி வீரர் ஜொனதன் ட்ரொட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டுபாயில் நடைபெற்ற தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தது.

கடந்த 2008 ஆம் ஜுலை மாதத்தின் பின்னர் தொடர்ச்சியாக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி தோல்வியடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது டெஸ்ட் கிரிக்கெட் நிரல்படுத்தலில் முதலாம் இடத்திலுள்ள இங்கிலாந்து இவ்வாறு பாரிய தோல்வியை சந்தித்துள்ளதை அடுத்து அந்த அணி மீது பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# ஹொக்கி தொடரை கைப்பற்றியது இந்தியா



(புதுடில்லி)

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஹொக்கித் தொடரை இந்திய அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. நேற்று முன்தினம் நடந்த கடைசிப் போட்டி 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலை ஆனது.

இந்தியா வந்த தென் ஆபிரிக்க ஆண்கள் ஹொக்கி அணி, ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. நான்கு போட்டிகளின் முடிவில் இந்திய அணி 3-1 என தொடரைக் கைப்பற்றி முன்னிலை வகித்தது. டில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த்ப் தேசிய மைதானத்தில் ஐந்தாவது மற்றும் கடைசிப்போட்டி நடந்தது.

ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்திய தென் ஆபிரிக்க அணிக்கு ரிக்கி வெஸ்ட் (26ஆவது நிமிடம்), இயான் ஹாலே (31வது நிமிடம்), மிகுயல் டா கிராசா (34ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு இந்திய வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் தென் ஆபிரிக்க அணி 3-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட இந்திய அணிக்கு, 43ஆவது நிமிடத்தில் யுவராஜ் வால்மிகி முதல் கோல் அடித்து நம்பிக்கை அளித்தார். தொடர்ந்து அசத்திய இந்திய அணிக்கு வி.ஆர். ரகுநாத் (49ஆவது நிமிடம்), எஸ்.கே. உத்தப்பா (66ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். கடைசி வரை போராடிய தென் ஆபிரிக்க வீரர்களால் கூடுதலாக ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இதனால் இப்போட்டி ஆட்ட நேர முடிவில் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலை ஆனது.

இதன்மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரை 3-1 எனக் கைப்பற்றிய இந்திய அணி கோப்பையை வென்றது.

# மாணவர்களுக்கு விளையாட்டு ஆர்வத்தை பெற்றோர்களே ஏற்படுத்த வேண்டும்

## விளையாட்டுத்துறை அமைச்சர்



(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத்துறை ஆர்வத்தினை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரியின் புதிய மாடிக்கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத்துறை ஆர்வத்தினை ஏற்படுத்துவதற்குப் பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உடல், உள ஆரோக்கியத்திற்கு விளையாட்டுத்துறை முக்கியமானதாகும்.

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் பட்சத்தில் அந்த மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத் தெரிவிற்கான புள்ளிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

(ஹோபர்ட்)

பிக் பாஷ் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியாவில் நடந்து வருகிறது. இதில் ஹோபர்ட்டில் நேற்று முன்தினம் நடந்த 2ஆவது அரை இறுதிப் போட்டியில் சிட்னி சிக்சர்ஸ் அணி, ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியைச் சந்தித்தது. முதலில் ஆடிய சிட்னி சிக்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 153 ரன் எடுத்தது. அதிகபட்சமாக மாட்டின்சன் 68 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் ஆடிய ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணி 20 ஓவர்களில் 146 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் சிட்னி சிக்சர்ஸ் அணி 7 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியில் அதிகபட்சமாக ஜேக்ஸ் 63 ஓட்டம் சேர்த்தார். இறுதிப் போட்டி பெர்த்தில் வருகிற 28ஆம் திகதி நடக்கிறது. இதில் சிட்னி சிக்சர்ஸ் அணி, பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

# மதுபானசாலையில் தகராறு; கால்பந்து வீரர் குத்திக் கொலை

(க்ரான்ஸ்டுட்)

தென்னாபிரிக்க கால்பந்து வீரர் ஜெப்ரிடுகா (வயது 26) மதுபான சாலையில் ஏற்பட்ட தகராறு ஒன்றின் போது இனந்தெரியாத நபர் ஒருவரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆபிரிக்கக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் ஆரம்ப மாகியுள்ள நிலையிலேயே இவர் கொலை செய்யப் பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவ தாவது,

டுகா கடந்த சனிக்கிழமை க்ரான்ஸ்டுட் என்ற நகரில் உள்ள மதுபானசாலையில் மது அருந்திக் கொண்டிருந்த போது அவருக்கும் அங்கிருந்த சிலருக்கும் தகராறு ஏற்பட்டது. இந்தத் தகராறின் போது அடையாளம் தெரியாத ஒருவர் அவரைக் கத்தியால் குத்தி விட்டுத் தப்பி ஓடினார்.

இதனையடுத்து படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பலனளிக்காமல் அவர் மரணமடைந்தார்.

தென்னாபிரிக்க தேசிய அணிக்காக 5 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ள டுகா கடந்த 2003-2009 ஆம் ஆண்டு வரை செல்சி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஒரு வருட காலம் கெய்சர் செப்ஸ் அணிக்காக விளையாடி தற்போது சுப்பர் ஸ்போர்ட் யுனைடெட் அணிக்காக விளையாடி வந்தார்.

# அடிலெய்டில் வெற்றி பெறுவோம்

(அடிலெய்ட்)

இந்தியாவுக்கு எதிரான 3 டெஸ்டிலும் வென்று 3-0 என்ற கணக்கில் உள்ளோம். 4ஆவது டெஸ்டிலும் வெல்வதே எங்களது இலக்கு. 4-0 என்ற கணக்கில் இந்திய அணியை "ஒயிட் வர்" செய்யும் வகையில் அடிலெய்ட் டெஸ்டில் வெற்றி பெறுவோம். அப்படி வெற்றி பெறாவிட்டால் அது எங்களுக்கு ஏமாற்றமாக இருக்கும். இவ்வாறு அவுஸ்ரேலிய அணித் தலைவர் கிளார்க் கூறியுள்ளார்.

பெர்த் டெஸ்டில் தொடரை வென்றதே திருப்தி அளித்தது ஏனென்றால் உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. நியூசிலாந்துக்கு எதிரான ஹோபர்ட் டெஸ்டில்



தோல்வி அடைந்தது ஏமாற்றம் தந்தது. அதற்குப் பிறகு இந்தியாவுக்கு எதிராக தொடர்ச்சியாக வெற்றி பெற்றது மனநிறைவு அளித்தது. அடிலெய்டில் நடைபெறும் 4ஆவது டெஸ்ட் சவாலாக இருக்கலாம் என்றார்.

# இந்திய குடியரசு தினத்தில் விருந்தினராக தாய்லாந்து பிரதமர்


(பாங்கொக்)

இந்தியாவுடனான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், இந்த வாரம் நடக்கவுள்ள குடியரசு தின விழாவில் தாய்லாந்துப் பிரதமர் யிங்லுக் ஷினவத்ரா (வயது - 44) கலந்து கொள்கிறார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதுடில்லியில் நடக்கவுள்ள குடியரசு தின விழாவில் தாய்லாந்துப் பிரதமர் யிங்ஈலுக் ஷினவத்ரா தலைமை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இதற்காக இவர் இந்தியாவுக்குச் செல்கிறார். கடந்த 30 ஆண்டுகளில் இந்தியாவுக்குச் சென்ற தலைமை விருந்தினரில் இவர்தான் மிகவும் இளையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யிங்லுக் ஷினவத்ராவுடன் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோர் அடங்கிய 100 பேர் கொண்ட குழுவும் வருகிறது.

இவரது இந்தப் பயணத்தில் இருதரப்பு பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் சில பேச்சுவார்த்தைகள் நடக்கவுள்ளன.



இதில் வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் தூதரகம் ஆகிய துறைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

அத்தோடு குற்றவாளிகள் அல்லது கைதிகளை நாடு கடத்துவது தொடர்பான புதிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தப்படவுள்ளது.

தாய்லாந்தில் பூர்வீக இந்தியர்களைத் தவிர 2 இலட்சத்து 50 ஆயிரம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 90 ஆயிரம் பேர் சீக்கியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் ரவுடியை விரட்டுகின்றது பொலிஸ்

(தஞ்சாவூர்)

வீடு இடிப்பு, கொலை மிரட்டல் தொடர்பாக சசிகலா தம்பி திவாகரனை கைது செய்வதறகாக பொலிஸார் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.


நேற்றுமுன்தினம் மாலை வரை திவாகரன் கைது செய்யப்படாத நிலையில் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகிறார்.

திவாகரன் அ.தி.மு.க.வில் இருந்தவேளை, தாழ்த்தப்பட்ட மககள் வைத்திருந்த நிலங்களுக்கு ஒரு விலையை நிர்ணயித்து, அடாவடியாக நிலங்களைப் பறித்து அதில் பண்ணை விவசாயம் செய்கிறார்.



இதற்கு எதிராக அளித்த புகாரின் பேரில், திவாகரன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பொலிஸார் திவாகரனைக் கைது செய்ய நடவடிக்கையில் இறங்கினர். ஆனால் திவாகரன் மன்னார்க்குடியில் இருந்து தலைமறைவாகியுள்ளார்.

# பாகிஸ்தான் கடற்படையால் இந்திய மீனவர்கள் கைது



(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததாகக் கூறி 31 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் கடற்படையினர் பிடித்துச் சென்றனர்.

அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததாக கூறிக் கடந்த ஆண்டில் மட்டும் 23 படகுகளுடன் 122 இந்தியர்களை பாகிஸ்தான் கைது செய்தது. இந்நிலையில், மீன் வளமிக்க பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் சென்று மீன் பிடித்ததாகக் கூறி 14 படகுகளுடன் 31 இந்திய மீனவர்களை அந்நாட்டு கடற்படையினர் பிடித்துச் சென்றனர்.

இப்போது அவர்கள் கராச்சிப் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கடலோரப் பாதுகாப்பு அமைப்பு (எம்.எஸ்.ஏ) செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இரு நாட்டு அரசும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையால் பாகிஸ்தானில் சிறைவாசம் முடித்த 179 இந்திய மீனவர்கள் இம்மாதம் தொடக்கத்தில் விடுதலையாகினர்.

மேலும் 360 இந்தியர்கள் தற்போது பாகிஸ்தான் சிறையில் உள்ளனர். இவர்களில் அதிகமானோர் மீனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாற்றுப் பாதையில் சேது சமுத்திரத் திட்டம்




(சென்னை)

சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப் பாதையில் நிறைவேற்றும் வாய்ப்பு உருவாகலாம் எனத் தெரியவருகின்றது. தனுஷ்கோடிக்கும் அரிச்சல்முனைக்கும் இடையில் அடையாளம் காணப்படும் "4 ஏ" பாதையில் கால்வாய் அமைக்க பரிந்துரைக்கப்படலாம். இருப்பினும், உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்திற்கு தகவல் தெரிவித்த பின்னரே திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

சேது சமுத்திரத் திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இராமர் பாலத்தை இடிக்கக்கூடாது எனக் கூறி இந்து அமைப்புகள் போராட்டம் செய்தன.

சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக வழக்கு தொடரப்படவே உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. மேலும் மாற்றுப் பாதையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்கும்படி கேடடுக் கொண்டது.

இதன்படி சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற, பல வழிகள் பரிசீலனைக்கு ஆரம்பத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் ஒன்றுதான், இப்போது கூறப்படும், "4 ஏ" பாதை. தற்போதுள்ள தனுஷ்கோடிக்கும் அரிச்சல்முனைக்கும் இடையில் உள்ள நிலப் பரப்பை வெட்டி எடுத்து, அதில் இந்த "4 ஏ" பாதை உண்டாக்கப்படும்.

இது 300 மீற்றர் அகலத்தில் 700 மீற்றர் நீளத்திற்கு இருக்கும். சேது சமுத்திரத் திட்டதை ஆரம்பித்தபோது அதன் திட்டச் செலவு என்பது 2 ஆயிரத்து 427 கோடி இந்திய ரூபாவாக இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே திட்டத்தின் செலவு 4 ஆயிரம் கோடி வரை உயர்ந்து விட்டது.

# சிறிய துறைமுகங்களுக்கும் பயங்கரவாதத் தாக்குதல் அபாயம்

(புவனேஸ்வர்)

இந்தியத் துறைமுகங்களுக்கு பயங்கரவாத தாக்குதல் அபாயம் உள்ளதால் அனைத்துத் துறைமுகங்களிலும் மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என தேசிய கப்பல் வாரியம் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது.

இதுகுறித்து, தேசிய கப்பல் வாரியத் தலைவர் பி.வி.கே.மோகன் தெரிவித்துள்ளதாவது,

தற்போது பெரிய துறைமுகங்களில் மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் உள்ளனர். சிறிய துறைமுகங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

இப்போது சிறிய துறைமுகங்களையும் பயங்கரவாதிகள் தாக்கும் அபாயம் உள்ளதால், மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையினரை அனைத்து துறைமுகங்களிலும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை துறைமுகங்களில் நான்கு அடுக்கு பாதுகாப்பு அவசியம் தேவை என தேசிய கப்பல் வாரிய இயக்குனர் தெரிவித்துள்ளார்.

# கூடங்குளம் போராட்டக்காரர்கள் பத்திரிகைக்கு எதிராக போர்க்கொடி

(தூத்துக்குடி)

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களைப்பற்றி தொடர்ந்து அவதூறுச் செய்தி வெளியிட்டால் தினமலர் அலுவலகத்திற்குள் புகுந்து போராடுவோம் என அணுசக்திக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.



கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக் கோரி திருச்செந்தூர் தேரடித் திடலில் நேற்று முன்தினம் மாலை நடந்த ஆர்ப்பாட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் இந்த அணுமின் நிலையத்தை மூடவேண்டும். இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தும் எங்களைப் பறறி அவதூறுச் செய்திகளை வெளியிட்டு வரும் தினமலரைக் கண்டித்து நெல்லை, வண்ணார் பேட்டையிலுள்ள அதன் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருந்தோம்.

ஆனால், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுமென்பதால் பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதத்தை ரத்து செய்துள்ளோம். ஆயினும், எங்களைப்பற்றி தினமலரில் தொடர்ந்து அவதூறுச் செய்தி வெளிவரும்பட்சததில பொலிஸ் அனுமதி தராவிட்டாலும் அந்த அலுவலகத்திற்குள் புகுந்து போராட்டம் நடத்துவோம் எனத்தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மீனவ அமைப்பு ஒன்றை நடத்தி வரும் கேரளாவை சேர்ந்த பாதிரியார் தாமஸ் கொச்சேரி என்பவர் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கெடுத்துள்ளதாகத் தெரிகிறது. கூடங்குளம் எதிர்ப்பாளர்களுக்கு ஜேர்மனியைச் சேரந்த அணு உலை எதிர்ப்பாளர் ஹெர்மான் என்பவர் மூலம் பெரு மளவு நிதி பெறப்பட்டு கூடங்குளத்தில் விநியோகிக்கப்பட்டி ருக்கலாம் என்ற தகவலுள்ளது.

# 'குடிமக்கள்' கோரிக்கைக்கு செவிசாய்த்தது கேரள அரசு




(ஆலப்புழா)

கேரளாவில் தயாரிக்கப்படும் 'ரம்' மதுபானத்தை எவ்வளவு குடித்தாலும் போதை ஏறவில்லை என குடிமகன் கள் தொடர்ந்து புகார் கூறியதால், 42 ஆயிரம் 'ரம்' போத்தல்களின் விற்பனையை கேரள அரசு நிறுத்தியுள்ளது.

கேரள அரசுக்குச் சொந்தமான நிறுவனத்தில், வெளிநாட்டு ரக மதுபானங்கள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயாரிக்கப்பட்ட, ஜெய் ஜவான் என்ற பெயரிலான ரம் மதுபானத்தை எவ்வளவு குடித்தாலும் போதை ஏறவில்லை என்ற புகாரை அடுத்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் சமீபத்தில மதுபானக் கடைகளுக்குச் சென்று, குறிப்பிட்ட மதுபான ரகத்தினை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பினர். பரிசோதனையில் ரம் மதுபானத்தில் போதை ஏறுவதற்காக சேர்க்கப்பட வேண்டிய எரிசாராயத்தின் அளவு மிகக் குறைவாகச் சேர்க்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட ரம் மதுபான போத்தல்கள் விற்பனையாகாமல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. எனவே, அவற்றை குடிமகன்களுக்கு விற்க வேண்டாம் என கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.

இவற்றின் மதிப்பு 1 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் எனத் தெரிய வருகின்றது.

# வீட்டைக் காணவில்லை; இது 'காமெடி' இல்லை

(புதுச்சேரி)

புதுவை அரசு ஊழியர் ஒருவர் வீட்டை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். நடிகர் வடிவேலு ஒரு காமெடி காட்சியில், 'என் கிணற்றை காணவில்லை' என்று புகார் செய்து பொலிஸை நிலைகுலைய செய்தது போல், புதுவை அரசு ஊழியர் ஒரு புகார் கொடுத்து பொலிஸாரைத் திகைக்க வைத்துள்ளார்.

புதுச்சேரியைச் சேர்ந்த சந்திரமோகன் (வயது-58). கிராமத்தில் இவருக்கு இருந்த பண்ணைவீடு கடந்த 30 ஆம் திகதி வீசிய 'தானே' புயலில் சின்னாபின்னமானது. ஆனால், இவர் வீடு இடிந்ததை அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளாததால் இவருக்கு அரசிடம் இருந்து நிவாரண உதவி கிடைக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த சந்திரமோகன், தனது வீட்டைக் காணவில்லை எனப் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இதுகுறித்துப் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால், மாவட்ட எஸ்.பி. பகலவனிடம் மனு கொடுத்துள்ளார். புகாரை பெற்ற காடாம்புலியூர் பொலிஸார் என்ன செய்வது என புரியாமல் குழம்பிப் போயுள்ளதாகத் தெரியவருகின்றது.

# 27 தீவிரவாதிகள் ஆப்கான் அரசிடம் சரண்

உலகச் செய்திகள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் 27 தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் அரசிடம் சரணடைந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஹெரட் மாகாணம் குசரா மாவட்டத்தில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த கட்டளைத்தளபதி முல்லா குலாம் சகி தலைமையிலான 7 தீவிரவாதிகள் சரணடைந்ததாக மாகாண ஆளுநர் அசீலுதீன் தெரிவித்துள்ளார்.

இதுபோல் நங்கர்ஹர் மாகாணத்தின் கிழக்குப் பகுதியிலும் 20 தலிபான் தீவிரவாதிகள் சரணடைந்ததாக அம் மாகாண அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# உலகின் மிகப்பெரிய இடப்பெயர்வு

(பீஜிங்)

சீனாவில் புத்தாண்டு பிறப்பதையொட்டி நேற்றுமுன்தினம் முதல் 15 நாட்கள் கொண்டாட்டம் ஆரம்பித்தது. இப்புத்தாண்டு பிறப்பதை ஒட்டி 15 நாட்கள் வசந்த விழா நடக்கும். இதில் கலந்து கொள்வதற்காக இடம் பெயர்ந்து வாழும் 134 கோடி பேர், தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்கின்றனர். இது தான், ஆண்டுதோறும் நடக்கும் உலகின் மிகப் பெரிய இடப்பெயர்வாகக் கருதப்படுகிறது.

சீனாவில் கி.மு. 500ஆம் ஆண்டில், நாள்காட்டி சீரமைக்கப்பட்டது. இது சூரிய, சந்திர நாள்காட்டி என அழைக்கப்படுகிறது. இளவேனிற்பருவத்தில் இந்த நாள்காட்டியின்படி புத்தாண்டு ஆரம்பமாகும். அதனால், இது வசந்த விழா எனவும் அழைக்கப்படுகிறது. சீன வானியல்படி மொத்தம் 12 ராசிகளுக்கும் ஒவ்வொரு விலங்குகள் அடையாளமாகக் குறிக்கப்படும். அந்த விலங்கின் பெயரால் அந்த ஆண்டு குறிக்கப்படும். அதன்படி, டிராகன் ஆண்டு பிறக்கிறது. டிராகன் என்பது



சீன தொன்மத்தில் வரும் ஒரு கற்பனை விலங்கு. இது அரச குடும்பங்களின் அடையாளமாக சீனாவில் அறியப்படுகிறது.

அடிக்கடி, வெள்ளம் மற்றும் பஞ்சத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில், நீரின் தெய்வமாகவும் கருதப்படுகிறது. தற்போது சீனாவைக் குறிக்க இந்த டிராகன் தான் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் படகு விபத்து



(தெஹ்ரான்)

ஈரானின் கடல் பகுதியில் பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்ததில் 16 பேர் பலியாகி உள்ளனர். ஹார்முஸ் தீவிலிருந்து பாரசீக வளைகுடாவில் உள்ள துறைமுக நகரம் பந்தர் அப்பாசுக்கு பயணிகள் படகு ஒன்று கடந்த சனிக்கிழமை புறப்பட்டது.

இதில் ஊழியர்கள் உட்பட 22 பேர் இருந்தனர். புறப்பட்ட சிறிது நேரத்தில் காற்று பலமாக வீசியதால் படகு தீவு ஒன்றில் தரை தட்டி கவிழ்ந்ததில். 16 பேர் பலியாகியுள்ளனர். இச்சம்பவத்தில் கப்டன் உட்பட 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் மேலும் ஒருவரைக் காணவில்லை எனவும் கூறப்படுகிறது. வானிலை நிலைவரம் சரியில்லை என முன்கூட்டியே விடுக்கப்பட்ட எச்சரிக்கையை படகின் கப்டன் மீறியதே விபத்துக்குக் காரணம் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மெக்சிகோவில் நிலநடுக்கம்

(சியாபஸ்)

வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் சியாபாஸ் மாநிலத்தில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.2 என்ற அளவுக்கு இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது. மெக்சிகோவின் டக்ஸ்லா கட்ரஸ் உட்பட பல்வேறு நகரங்களில் அடுக்குமாடி கட்டடங்கள் குலுங்கின. கடற்கரையில் இருந்து 57 கிலோ மீற்றர் தொலைவில் பசிபிக் பெருங்கடலில் 66 கிலோ மீற்றர் ஆழத்தில் அதிர்வு மையம் கொண்டிருந்ததாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேதம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## போராட்டம்

(பேர்ன்)

சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்னில் உலகப் பொருளாதாரச் சங்கத்தின் கூட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

அரசு அனுமதி பெறாததால் இந்த போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் பொலிஸார் தெரிவித்தனர். உலகப்பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய்வதற்காக அரசியல் தலைவர்களையும் பொருளாதார நிபுணர்களையும் கொண்டு நாளை இக்கூட்டம் ஆரம்பிக்கின்றது. போராட்டக்காரர்கள் 'உலகப் பொருளாதாரச் சங்கத்தை கலைத்துவிடு' என்று கோஷம் எழுப்பினர்.

# பாகிஸ்தான் வீரர்களை தலிபான்கள் சுட்டுக்கொல்லும் வீடியோ அனுப்பிவைப்பு

(பெஷாவர்)

பாகிஸ்தானைச் சேர்ந்த 15 இராணுவ வீரர்களைத் தலிபான்கள் சுட்டுக்கொல்லும் வீடியோ காட்சியை தலிபான்கள் ஒரு முன்னணி ஆங்கில செய்தி நிறுவனத்திற்கு அனுப்பியுள்ளனர்.

அதில் பாகிஸ்தானின் எல்லைப்பகுதி இராணுவவீரர்கள் 15 பேர் , பின்கைகள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக இருத்திவைக்கப்பட்டு பின்னர் வரிசையாக நிற்கவைக்கப்பட்டு, ஒவ்வொருவரையும் துப்பாக்கியால் சுட்டுத்தள்ளும் இக்கொடூர காட்சியானது-

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள மலைப்பகுதி ஒன்றில் எடுக்கப்பட்டிருந்தது. 2.38 நிமிடம் ஓடிய அந்த வீடியோ காட்சியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பாகிஸ்தான் -ஆப்கான் எல்லையின் கைபர் மாவட்டத்தில் பதுங்கியுள்ள தகரிர்-இ- தலிபான்கள் அமைப்பினர்தான் இந்தக் கொடூரச் செயலை அரங்கேற்றிருப்பதாகவும் தெரி



யவருகின்றது. இவ்வீடியோவில் தலிபான்களில் ஒருவர் பேசுகையில், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை கைது செய்து சிறையில் அடைத்தாலோ, சுட்டுக் கொன்றாலோ இதே நிலைதான் மற்ற பாகிஸ்தான் வீரர்களும் ஏற்படும் எனப் பேசும் காட்சியும் இடம் பெற்றுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

கோழைகள் சாதிக்கக் கூடிய ஒரே சாகசச் செயல் 'திருமணம்' செய்துகொள்வதுதான். – **வோல்டேர்**

காதலைப் போலவே இலக்கியத்திலும் பிறர் தேர்ந்தெடுப்பதைப் பார்த்து நாம் வியப்படைகிறோம். – **அன்ட்ரி மாவ்ராஸ்**

மனித மூளை மிக விநோதமானது. மனிதன் பிறந்த உடனே அது வேலை செய்யத் தொடங்கிவிடும். ஆனால் அவன் எப்போது பொது மேடைகளில் பேச ஆரம்பிக்கிறானோ, அப்போது வேலை செய்வதை நிறுத்தி விடுகிறது. – **ஜென்செல்**

இளமையில் முட்டாளாக இருப்பது பாவம் ; வயது வந்ததும் அப்படியிருப்பது பைத்தியக்காரத்தனம். – **சிங்செள**

புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான். – **ஸோக்ரட்டீஸ்**

தான் உண்ணப்போகும் பிராணியுடன், உண்ணும் வரை நட்புடன் பழகும் ஒரே விலங்கு மனிதன்தான். – **சாமுவேல் பட்லர்**

தன் மேல் அடுத்தவர் வீசும் கற்களை எடுத்துத் தனக்கு உறுதியான அத்திவாரம் அமைப்பவன்தான் வெற்றிகரமான மனிதன். – **டேவிட் பிரிங்லி**

கிஷ்கிந்தாவாசிகள் முதன்முறையாக சீதையைப் பார்த்தவுடன் "என்னமோ சீதை பேரழகி அப்படியிப்படி என்று சொன்னார்களே, இவளுக்கு ஒரு வால் கூட இல்லையே" என்று ஆதங்கப்பட்டார்களாம். நியாயந்தான். – மா.அரங்கநாதன்

"முக்காமல் முனகாமல் பிள்ளையைப் பெற்றெடுத்தேன்" என்று ஒருத்தி சொன்னால், அவள் பெற்றெடுத்தாளா என்று சந்தேகப்பட நமக்கு உரிமை உண்டு. – **அசோகமித்திரன்**

நாம் எந்தச் செயல்களைச் செய்யலாம் என்று முடிவு செய்வோம். நாம் செய்யும் செயல்கள் நம்மை இத்தகையவர் என்று முடிவு செய்யும். – **வெர்ன்ஸ்**

தன்னம்பிக்கை குதிரைகள் பாய்ந்து செல்லும். ஆனால் அனுபவக் கழுதைகள் மெதுவாகச் செல்லும். – **ரஷ்யப் பழமொழி**

மட்டமான ருசியைப் போல அதிவேகமாகப் பரவக் கூடியது வேறு எதுவும் இல்லை. – **ஒட்டேகா யி காஸட்**

இருள்பாதையில் நடப்பது போன்றது வாழ்க்கை. எண்ணிப் பார்க்கப் பார்க்க அச்சமாய் இருக்கும். எனில் நடக்கத் தொடங்கி விட்டாலோ அச்சத்தோடு விரவிய இன்பம் பாதை நெடுக இருக்கும். – **சீஸனோவ்**

ஒரு இரகசியத்தை இரகசியமாக வைத்திருக்க வழி, அது இரகசியமான விஷயம் என்பதை இரகசியமாக வைத்திருப்பது தான். – **ஹென்றி கெய்லர்**

நேர்மை எனக்குப் பிடிக்கும். அது நற்பண்பு என்பதால் அல்ல. மன உறுத்தல் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்பதால்தான். – **கோபிகிருஷ்ணன் சிறுகதையில்**

நோபல் பரிசை வாங்குவதில் ஒரு நன்மையும் இருக்கிறது. ஒரு தடவை நீங்கள் அதை வாங்கிவிட்டால், அடுத்த தடவை அதை வாங்க வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்படுவதில்லை. இது பெரிய நன்மைதானே! – **கப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்**

தைரியம் வேண்டும், தன்னம்பிக்கை வேண்டும் என்கிற உபதேசங்கள் தவறான மனிதர்களிடம் பலிப்பது போல, இருக்கிற சில நல்லவர்களிடம் பலிப்பதில்லை. – **கன்ஃபூசியஸ்**

முன்னேறும் இலக்கு, கிடைக்கும் வெற்றிக்குத் தகுந்தபடி எப்போதும் விரிந்துகொண்டே போகக் கூடியது. – **கவிதாசரண்**

எத்தனை புயல்களை நீ சமாளித்துக் கடந்தாயென்பது முக்கியமல்ல; கப்பலை ஒழுங்காகக் கரை சேர்த்தாயா என்பதே! – **வில்லியம் மீக்லி**

உண்மைகளைச் சோதிக்கிறவன் அவற்றைப் பொய்யாக்குகிற வரை திருப்தியடைய மாட்டான். – **ஜெயகாந்தன்**

அவுஸ்ரேலிய வானொலிப் பேட்டியில், "அவுஸ்ரேலிய தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?" என்று கேட்டதற்கு நடிகர் நாகேஷின் பதில்: "நான் கடைமனிதன். தரைக்குச் சமமானவன். மிக எளியவன். எனக்குத் தெரிந்ததெல்லாம் தயவுசெய்து யாரும் யாருக்கும் உபதேசம் செய்யாதீர்கள் என்பதுதான்.

Never advise anybody. If you need advise, anybody will help you. If you need help, everybody will only advise you".

# போர் துரத்திய மக்களை கடன் துரத்துகிறது!

- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்


ஒரு காலத்தில், வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, சீட்டுக் கட்டிச் சம்பாதித்துச் சீதனத்துக்குக் காசு சேர்த்தவர்கள் ஈழத்தமிழர்கள். பிறகு, தங்களின் சம்பாத்தியங்களை வங்கிகளில் வைப்பிலிட்டுச் சேமித்தார்கள். வங்கிகளில் சேமிப்பது பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருந்தது அவர்களுக்கு. யுத்தச் சூழலில் இது இன்னும் பாதுகாப்பானதாகத் தோன்றியது.

இலக்கங்கள் கூடக்கூட சேமிப்பின் மகிழ்ச்சி உச்சத்துக்கு ஏறும். அதைவிட அதிலொரு பெருமை வேறு.

இதனால், தமிழ்ப்பகுதிகளில் இயங்கிய வங்கிகள் சேமிப்பில் முதலிடம் வகித்தன. ஆனால், தெற்கு மற்றும் மேற்கிலுள்ள சிங்களப்பகுதிகளின் வங்கிக் கிளைகள், சேமிப்புக்குப் பதிலாகக் கடனைத் தாராளமாக வழங்கிக் கொண்டிருந்தன. சிங்களவர்கள் சேமிப்பதற்குப் பதிலாகக் கடனை வாங்கிக் கொண்டிருந்தனர்.

இதை மறுவளமாகப் பார்த்தால், தமிழர்களின் காசில் சிங்களவர்கள் வாழ்ந்தனர் எனலாம். அவர்கள் வங்கிகளில் குறைந்த வட்டிக்குக் கடனை வாங்கி, தங்களுடைய தொழில் முயற்சிகளைச் செய்தனர். முதலீடுகளிலும் தாராளமாக ஈடுபட்டனர். வடக்குக் கிழக்கையும் விட ஏனைய பகுதிகளில் நிலவிய ஒப்பீட்டளவிலான அமைதிச் சூழல் இதற்கு மேலும் சாதகமான வாய்ப்புகளை வழங்கியது.

சேமிப்பதற்குப் பதிலாகத் தாராளமாகச் செலவு செய்யும் பழக்கம் சிங்களவர்களுக்கு எப்போதும் அதிகம். செலவு




செய்வதற்காகவே சிங்களவர்கள் கடுமையாக உழைப்பார்கள் என்று தென்பகுதியில் நீண்டகாலம் இருந்த நண்பர்கள் சொல்வர். உழைப்பதைத் தாராளமாகச் செலவழிக்கும் இயல்பு அவர்களிடம் உண்டு. விதவிதமாகச் சாப்பிடுவதிலும், சுற்றுலாக்களுக்குப் போவதிலும் கொண்டாட்டங்களில் தாராளமாகச் செலவழிப்பதிலும் அலாதிப் பிரியம் அவர்களுக்கு.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் தெற்கிலிருந்து தினமும் பஸ் வண்டிகளில் சுற்றுலாவாக ஏராளம் சிங்களவர்கள் வடக்கே வருவர். வசதியுள்ளவர்கள்தான் இப்படி வருவதாக யாரும் எண்ணவேண்டாம். மிக வசதி குறைந்தவர்கள்கூட குடும்பம் குடும்பமாக வருவார்கள்.

அப்படி வருகிறவர்களுடைய உடற தோற்றத்திலும் உடைகளிலும் அவர்கள் உடல் உழைப்புச் செய்யும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியும். ஆனால், ஊர்களைப் பார்ப்பதிலும் பயணங்களைச் செய்வதிலும் அவர்களுக்கு நிறைய விருப்பம் என்றபடியால், செலவைப் பற்றிக் கவலைப் படாமல் இப்படி வருவார்கள்.

இப்படியான இயல்புள்ள சிங்களவர்கள் முதலீடுகளைச் செய்யவும் ஏதாவது தொழில்களை ஆரம்பிக்கவும் வங்கிகளில் தாராளமாகவே கடன்களை எடுததார்கள். வடக்கிலே குறைந்த வட்டியைக் கொடுத்துத் தமிழர்களின் சேமிபபைப் பெற்றுக் கொண்ட வங்கிகள், கூடுதலான வட்டிக்குச் சிங்களவர்களுக்குக் கடன்களைக் கொடுத்தன.

போதாக்குறைக்கு போர் நடந்த காலத்தில், அரசாங்கமே தமிழர்களின் சேமிப்பைப் போருக்குப் பயன்படுத்தியதாகவும் ஒரு அபிப்பிராயம் உண்டு. வெளிநாடுகளில் இருந்து போருக்காகப் பட்ட கடன் போதாதென்று வங்கிகளில் இருந்த சேமிப்பை அரசாங்கம் கடனாகப் பெற்றுப் போருக்குப் பயனபடுத்தியதாக அந்த நாட்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எது எப்படியோ அன்று இப்படியாக இருந்த ஒரு நிலைமை இன்று மாறியிருக்கிறது. இது யுத்தம் ஏற்படுததிய மாற்றம். இப்பொழுது தமிழர்களும் வங்கிகளில் தாராளமாகக் கடன்களை எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதிலும் வன்னியில் வங்கிக் கடன்களைப் பெறாத குடும்பங்களே இல்லை. கடன்படவில்லை என்றால் அவர்களால் வாழவே முடியாது என்ற நிலை. இந்த நிலையில் எப்படி கடனை எடுக்காமல் இருக்க முடியும்?

வன்னியில் நடந்த இறுதிப்போர், எல்லோரையும் அகதிகளாக்கியது. அகதிகளோ எல்லாவற்றையும் இழந்துவிட்டவர்கள். எனவே, இந்தப் போர் இன்று எல்லோரையும் அகதிகளாக்கிக் கடனாளிகளாக்கி விட்டது.

இவர்கள் சாதாரண கடனாளிகளில்லை. பெருங்கடனாளிகள். எதற்கும் கடன் எடுக்க வேண்டும் என்பதால், எல்லோரும் இரண்டு மூன்று கடன் என்று எடுத்துப் பெருங்கடனாளிகளாகிக் கொண்டேயிருக்கிறார்கள். வட்டியைக் கட்ட முடியாமல், மேலும் புதிய கடனெடுத்து பழைய கடனின் வட்டியைக் கட்டுகிறாரகள். பிறகு புதிய கடனுக்காக வேறு கடனை எடுக்கிறார்கள். தொடர்கடன்கள். நிரப்பவே முடியாத கடன்கள்.

வங்கிகளும் தவிச்ச முயலை அடிப்பதைப் போல பாதிக்கப்பட்ட மக்களை வைத்துக் கடனைக் கொடுத்து வட்டியையும் முதலையும் கறக்கின்றன. கடன் கொடுப்பதற்காகவே ஏராளம் வங்கிகள். ஏராளம் கிளைகள். ஏராளம் திட்டங்கள்.

போருக்குப் பிந்திய வடக்கில் 64 நிதி நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளைத் திறந்து கடன் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றன. ஊர் ஊராக, வீடு வீடாகக் கடன் திட்டங்களைப் பற்றிய பிரச்சாரம் வேறு.

சனங்களைக் கடனாளிகளாக்குவதற்கே அரசாங்கமும் திட்டமிட்டுள்ளது போலும். இல்லையென்றால், அது பாதிகப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்களையும் நிவாரணத்தையும் வழங்கியிருக்கும். அழிவுகளை முழுமையாகப் புனரமைத்திருக்கும்.

ஆனால், அப்படியான எதையும் அது செய்யவில்லை. அப்படியான எதையும் செய்யவும் அது யோசித்திருப்பதாகத் தெரியவில்லை.

சிறு உதவிகள் எந்த நிலையிலும் இந்த மக்களுக்குப் போதியதாக இருக்காது. முற்றாக இழந்த மக்களுக்கு முழுமைப்படுத்தப்பட்டதொரு உதவித் திட்டமே அடிப்படையான ஆதாரத்தை உருவாக்கும். அந்த அடிப்படையில் இருந்தே அவர்கள் தங்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களாக இருப்பது வேறு. போரினால் முழுதாகவே அழிவடைந்த ஊர்களில் எல்லாவற்றையும் இழந்த மக்களாக இருக்கும் நிலை வேறு. இரண்டுக்கும் வித்தியாசமுள்ளது.

அரசாங்கம் எந்த வேறுபாட்டைப் பற்றியும் சிந்திக்கவும் இல்லை; எந்த வித்தியாசங்களைப் பற்றியும் அக்கறைப் படவும் இல்லை. புலம்பெயர்ந்த தமிழர்களும் தாய்நிலத்தில் இருக்கின்ற தமிழர்களுக்காகப் பாசக்கண்ணீரை வடிக்கிறார்களே தவிர, பாசத்துடன் நடப்பதாகத் தெரியவில்லை.

போர் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. தமிழர்களின் பொருளாதாரச் செயற்பாட்டையும் நோக்குநிலையையும் கூட மாற்றிவிட்டது.

அது சேமிப்புகளைச் சிதைத்துவிட்டது. சேமிப்பாளர்களையும் சேமிப்புக்கான அடிப்படைகளையும்கூடச் சிதைத்தே விட்டது.



ஆகவே, சேமிப்புக்குப் பதிலாக இப்போது வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் கடனுக்காகவே உழைக்கிறார்கள். கடனையும் வட்டியையும் கட்ட வேண்டும் என்ற கடப்பாட்டுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கடன் அவர்களைத் துரத்துகிறது. ஓய்வில்லாமல் ஓடும்படி அது துரத்திக் கொண்டிருக்கிறது.

'முன்னர் போர் துரத்தியது. இப்போது கடன் துரத்துகிறது' என்று ஒரு கடனாளி வேடிக்கையாகச் சொன்னார். அவர் இப்படிச் சொன்னபோதும் அவருடைய இந்தப் பேச்சினுள்ளே ஒருவித துயரம் இழையோடியிருப்பதைக் காணலாம்.

போரின்போது கைகளை, கால்களை, கண்களை என்று உடல் உறுப்புகளை இழந்தவர்கள் கூட ஓட முடியாத நிலையில் கடனுக்காக ஓடிக் கொண்டிருக்கும் நிலையைக் காண முடியும்.

ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும் என்ற நிலையிலேயே இவர்கள் வங்கிகளில் கடனாளியானார்கள். ஆனால், பட்ட கடனைக் கட்டக்கூடிய வாறு உழைப்போ வருமானமோ இவரகளுக்கில்லை.

எவ்வளவுதான் முயன்றாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போதிய வருமானத்தை யாராலும் எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கும் சனங்களும் பாதிகப்பட்டவர்களே. ஆகவே, அவர்களிடம் தாராளமாகச் செலவைச் செய்யக் கூடியவாறான நிதிவளம் இருப்பதில்லை. நிதிவளம் இல்லாத இடத்தில் எப்படி அதிக வருவாயை எதிர்பார்க்க முடியும்? வருவாய் குறைந்த நிலையில் எப்படிக் கடனுக்கும் வட்டிக்குமான உழைப்பை எதிர்பார்ப்பது?

ஆனால் ஒன்று - வங்கிகள் வந்த பிறகு, ஊர்களில் தவிச்ச முயல் அடிக்கிற நாள் வட்டி, அறா வட்டி, மீற்றர் வட்டிக்காரர்களின் கைகள் வீழ்ந்து விட்டன.

நாடே கடன் பட்டுக் கொண்டிருக்கும்போது குடிமக்கள் கடன்படுவதில் என்ன புதினம் என்று நீங்கள் கேட்கலாம்.

அப்படியான ஒரு கேள்வியைத் தான் 'எத்தன்' என்ற படத்திலும் கேட்கிறார் விமல். கடனிலேயே நாடும் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார கள், வாழ வேண்டியிருக்கிறது என்பதை மிகச் சுவாரஷ்யமாகச் சொல்லும் படம் இது. ஆனால், படத்தைச் சுவாரஷயமாகப் பார்ப்பதைப்போல வாழ்க்கை இருப்பதில்லை.

சேமிப்பையே தங்கள் வாழ்வாகக் கொண்டிருந்த ஒரு நிலை பெயர்ந்துள்ளதைப்போலவே தமிழர்களின் அடையாளங்களாக இருந்த பல சிறபபம்சங்களும் போரினால் பெயர்ந்தும் சிதைந்தும் விட்டன. இவற்றை மீளுருச் செய்யும் காலம் எப்போது எந்த வடிவில் வருமோ!

## தரும ஸ்தாபன அந்தஸ்தை இழந்த கனடிய தமிழர் புனர்வாழ்வு நிறுவனம்!

கடந்த பல வருடங்களாக கனடாவில் இலாப நோக்கற்ற தரும நிறுவனமாக (Charity) இயங்கி வந்த கனடியத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் (Canadian Foundation for Tamil Refugee Rehabilitation), 2011 டிசம்பர் 10ஆம் திகதி முதல் அதற்கான அந்தஸ்தை இழந்துள்ளதாக கனடிய வரி வசூல் அமைப்பால் (Canada Revenue Agency) அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் ஒழுங்கற்று இருந்தமை மற்றும் கனடாவுக்கு வெளியேயுள்ள 'தகுதியற்ற அமைப்பு'களுக்கு 700,000 டொலர்களை வழங்கியமை போன்ற காரணங்களே, அது தனது தரும ஸ்தாபன அந்தஸ்தை இழந்ததிற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கனடாவின் தற்போதைய பிரதமர் ஸ்ரீபன் காபரின் முன்னைய அரசு பதவிக்கு வந்ததும், 2006இல் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து கனடாவில் தடை செய்தது. பின்னர் புலிகளின் துணை அமைப்பு போலச் செயற்பட்டு வந்த 'உலகத் தமிழர் இயக்கம்' தடைசெய்யப்பட்டதுடன், அதன் காரியாலயங்களும் 'சீல்' வைக்கப்பட்டு, சொத்துக்களும் முடக்கப் பட்டன.

தற்பொழுது கனடியத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தரும ஸ்தாபன அந்தஸ்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளது. இந்த அமைப்பு புலிகளுக்குச் சார்பானது என்றும்,

எனவே அது கனடாவில் தடை செய்யப்பட வேண்டும் என்றும், கடந்த காலங்களில் சில தரப்புகளால் கோரிககைக்ள் விடுக்கப்பட்டு வந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, கனடாவில் பல பங்குதாரர்களை கொண்டு சில முக்கிய தமிழ் பிரமுகர்களால் பெரும் விளம்பர தடல்புடல்களுடன் மிக அண்மையில் உருவாக்கப்பட்ட நிதி நிறுவனமொன்று, மிகக் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையை அறிவித்திருப்பது, மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

சிலர் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கையில், யாழ்ப்பாணத்தில் சில வருடங்களுக்கு முன்னர் பலருடைய பணத்தை ஏப்பம் விட்டுவிட்டு தலைமறைவாகிய 'சப்றா பினான்ஸ்' என்ற (இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முக்கிய பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது) மோசடி நிதி நிறுவனத்துடன் ஒப்பிடுவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

- நன்றி: வானவில்

# கலாநிதி கலாமின் யாழ். விஜயத்தின்போது....


பலாலியில் வரவேற்பு


கடற்றொழில் சங்க பிரதிநிதிகளுடன் சந்திப்பு


பல்கலையில் கௌரவம்


பல்கலையில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்


சந்திரகுமார் எம்.பியுடன்


யாழ். இந்துவில்

## ஜனநாயக...

மக்களின் நலனுக்காக செயற்படும் ஏனைய தமிழ் கட்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைக்கும் செயற்பாடு இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு தேசிய மகாநாடு எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என வவுனியா நெல்லி ஸ்டார் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் பேச்சுக்களை நீதியாக அணுகினாலும், அரசாங்கம் அதன் நீதியில் நின்று தவறியிருக்கின்றது. இது ஒரு காலம் கடத்தும் செயலாகவே இருக்கின்றது. அந்த வகையில் ஒரு வருடமாக ஒரு அங்குலம் கூட நகரமுடியாத நிலையிலேயே பேச்சுவார்த்தை சென்று கொண்டிருக்கின்றது. இதை நாம் மக்களுக்கு சொல்ல வில்லை என்பதல்ல. நிச்சயமாக நாம் ஒவ்வொரு பேச்சின் பின்பாகவும் பத்திரிகைகளுக்கு விளங்கப்படுத்தியுள்ளோம். முழுமையாக நாம் என்ன தீர்வுத் திட்டத்தை வைத்தோம் என்பது சொல்லப்படாது விட்டாலும் கூட பேச்சுவார்த்தையில் நடந்த நிகழ்வுகள் பற்றி மக்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்தி வரப்பட்டுள்ளது

நாம் தனிநாடு கோரி நிற்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு ஒரு சுயாட்சியைக் கேட்கின்றோம். இது உலகத்தில் இல்லாத விடயமல்ல. அதற்கான அதிகாரங்களைக் கேட்டோம். ஆனால் இன்று 13 ஆவது திருத்தத்தில் இருக்கின்ற அதிகாரங்களைக் கூட தரமாட்டோம் என்கின்ற நிலையில் தான் அரசாங்கம் உள்ளது. எனவே எமது கட்சியை பலப்படுத்தி ஜனநாயக வழியிலான போராட்டங்களை நடத்த வேண்டிய தேவையுள்ளதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாக பதிவு செய்து மாவட்ட மற்றும் கிராம ரீதியாக பல கிளை அலுவலகங்களைத் திறந்து கட்சியை பலப்படுத்துவோம என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகதாரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## குடாநாட்டின்...

நலன்சார் விடயங்களில் இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பிலும் குறிப்பாக அப்பகுதியில் பாடசாலைகளின் செயற்பாடுகள் தொடர்பில் அப்துல் கலாம் அமைச்சர் உள்ளிட்ட துறை சார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீள் குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளில் 90 சத வீதமான பாடசாலைகள் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளதாகவும் ஏனையவற்றை இயக்குவதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் எடுத்து விளக்கினார்.

யாழ் மாவட்டத்தில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இருந்ததாகவும் அவற்றில் சில மட்டுமே மீளவும் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

இதனிடையே யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் உயர் மட்ட பிரதிநிதிகள் அப்துல் கலாமைச் சந்தித்து இந்திய மீனவர்களால் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக றோலர் மீன்பிடியால் கடல் வளங்கள் அழிக்கப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக கடல் வளங்களை பாதுகாக்க முடியும் எனவும் தமது எல்லைக்குள் அத்துமீறி வரும் இந்திய மீனவர்கள் தமது தொழில் வலைகளை அறுத்துச் செல்வதாகவும் இதனால் தமக்கு ஏற்படக்கூடிய பாதக நிலை தொடர்பாகவும் எடுத்து விளக்கினார்.

நெடுந்தீவு மீனவர்கள் தாம் வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே தொழிலுக்குச் செல்வதாகவும் ஏனைய நாட்கள் தொழில்கள் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவித்திருந்தனர். இதேபோன்று வடமராட்சி மீனவர்களும் தாம் இந்திய மீனவர்களால் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகள் தொடர்பாக எடுத்து விளக்கியதுடன் மனுக்களையும் அப்துல் காலாமிடம் கையளித்தனர்.

இதன்போது இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே. காந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் வே.மகாலிங்கம், சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸவிதாரன, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்

## காணி ...

வட,கிழக்கு இணைப்பின் சாத்தியப்பாடு குறித்தும் அதில் கிழக்கு மாகாண மக்களது அபிலாசைகள் பற்றியும் தங்களுடன் விரிவாக கலந்துரையாட நாம் தயாராகவுள்ளோம்.

எவ்வாறாயினும் மாகாண சபை முறைமை தொடர்பிலும் மாகாணசபை கட்டமைப்பின் 13 ஆவது அரசியல் அதிகாரப் பங்கு தொடர்பிலும் நாம் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக நேரடியாகத் தொடர்புபட்டிருக்கிறோம்.

இனிமேலும் அடைய முடியாத இலட்சியங்களுக்காகவும், கோசங்களுக்காகவும் எம்மக்களை பலி கொடுக்காமல் யதார்த்தபூர்வமாக அரசியல்தீர்வுக்காக நாம் கரம் கோர்த்து செயற்படுவதே இன்றைய காலத்தின் கட்டாயமும் வரலாற்று கடமையுமாகும்.

எனவே மேற்குறித்த விடயங்கள் குறித்து பேசுவதற்கு இக்கடிதம் கிடைக்கப் பெற்று 15 நாட்களுக்குள் தங்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதிலை எதிர்பார்க்கிறேன் என்று சந்திரகாந்தனின் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## வீட்டின்...

செய்தனர். சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தநிலையில், இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் சிவகுமார், யாழ்.மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று புதைக் கப்பட்ட சிசுவை எடுப்பதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெறும்.

(கே, 29)

## இலங்கை...

கையாளும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சிறப்பு தூதுவரான ஸ்டீபன் ராப் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது பற்றிய தகவல் ஊடகங்களின் மூலமே தெரிந்து கொண்டேன்.

அது பற்றிய அதிகாரபூர்வ தகவல்கள் ஏதும் பரிமாறப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## அபிவிருத்தியின்....

பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்திய அணு விஞ்ஞானியும், முன்னாள் குடியரசுத் தலைவருமான கலாநிதி அப்துல் கலாமிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி, மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்படப் பல்வேறு தரப்பினரும் சிறப்பான வரவேற்பை அளித்தனர்.

முன்னதாக நேற்றுக்காலை பலாலி விமான் நிலையத்தில் வந்திறங்கிய கலாநிதி கலாமை, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், இந்தியத் துணைத்தூதுவர் வே.மகாலிங்கம் மற்றும் மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். இதன்பின்னர் ஆளுநரின் அலுவலகத்திற்கு விஜயம் செய்த கலாம் அவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் வரவேற்றனர்.

இதனையடுத்து குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கலாநிதி கலாம் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். அத்துடன் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் உயர்மட்ட பிரதிநிதிகள் கலாநிதி கலாமைச் சந்தித்து அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களால் .தாம் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர்.

ஆளுநரின் மாளிகையில் நடந்த சந்திப்பில் கலாநிதி அப்துல் கலாமிற்கு ஆளுநரால் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதன்பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சென்ற கலாம், பல்கலைக்கழக மாணவர்களின் வரவேற்புடன் கைலாசபதி கலையரங்கிற்கு அழைத்து வரப்பட்டார். அங்கு பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன், "புயலைத்தாண்டினால் தென்றல்" என்ற தலைப்பில் விசேட உரையினையும் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் திருக்குறளே தனது வாழ்வில் இலட்சியப் பொறிகளை உருவாக்கியது எனத் தெரிவித்ததுடன், செயலில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம். உங்களது நாட்டை வளமானதொரு நாடாக மாற்றுவதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் மாணவர்களின் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதமான மனநிலையில் ஒற்றுமை ஏற்பட வேண்டும்

எனது கணித பாடத்திற்கான ஆசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர். 1941ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் நான் கல்வி கற்றபோது கனகசுந்தரநாத்' என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவ் ஆசிரியர் எனக்கு இலவசமாக கணித பாடத்தைக் கற்பித்தார். அவரிடமிருந்து நான் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொண்டேன் எனத் தெரிவித்தார்.

இதன்போது கலாநிதி கலாம் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன், துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை, கலாநிதி கலாமின் நிகழ்விற்காக வந்த பெருமளவானோர் கைலாசபதி கலையரங்கம், நிரம்பி வழிந்ததினால் மண்டபத்திற்கு வெளியே நின்றதைக் காணமுடிந்தது.

இதன் பின்னர் யாழ். இந்துக் கல்லூரிக்குச் சென்ற கலாநிதி கலாம் சிறப்பாக வரவேற்கப்பட்டார். அங்கு அவர் பிரார்த்தனை மண்டபத்தை திறந்து வைத்தார். இதன் பின்னர் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்குபற்றினார். கல்லூரி அதிபர் கணேசராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாநிதி கலாம் சிறப்புரையாற்றியதுடன், மாணவர்களுடன் கலந்துரையாடலையும் நடத்தினார். குழுமியிருந்த மாணவர்களில் பத்துப் பேரை அழைத்து கேள்வி - பதில் ரீதியில் கலந்துரையாடினார். அத்துடன் அதிபர் கணேசராசாவிடம் கல்லூரிக்கென ஒரு தொகுதி நூல்களையும் கையளித்தார்.

இதன்போது கலாநிதி கலாம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நிறைவு செய்த கலாம் நேற்று மாலை ஆறு மணியளவில் பலாலி சென்று அங்கிருந்து விமான மூலம் கொழும்பு சென்றடைந்தார்.

# வடக்கு, கிழக்கில் பணியாற்றுவதற்கு அரச ஊழியர்கள் முன்வரவேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால அழைப்பு



(கொழும்பு)

யுத்த பாதிப்புக்கு இலக்கான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்ற தயங்கி, அங்கு எவரும் செல்லாமல் இருந்தால், அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியாத நிலை ஏற்படுமென சுகதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களில் இருந்து, சாதாரண விவசாயிகள் வரையில் வீட்டில் இருந்து செல்லக்கூடிய தொழில்களையே எதிர்பார்க்கின்றனர்.

இதனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், வைத்தியர்கள், ஆசிரியர்கள், அஞ்சல் ஊழியர்கள், தாதியர்கள் என எவரும் செல்ல தயங்குகின்றனர்.

அவ்வாறு தயங்குவதால், நாட்டின் அபிவிருத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவதில் சிக்கல் ஏற்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொன்சேகா மீது 41 குற்றச்சாட்டு விசாரணை அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளரான சேனக்க ஹரிப்பிரிய டி சில்வா ஆகியோருக்கு எதிராக படைத்தரப்பில் இருந்து தப்பிச் சென்றவர்களை வைத்திருந்தமை, அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்பட்டமை உட்பட 41 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கியதாக மற்றொரு வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்ட போது, இவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நேற்று நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டன.

படைத்தரப்பில் இருந்து தப்பிச் சென்றவர்களுடன் தொடர்பினை வைத்திருந்தமை, அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக



செயற்பட நடவடிக்கை மேற்கொண்டமை உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் இதில் அடங்கியிருப்பதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் குறித்த 41 குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ள பிரதிவாதிகள் தாம் நிரபராதிகள் என பகிரங்கமாக கூறியுள்ளனர். இதனையடுத்து இவ்வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் நாளாந்தம் விசாரணை செய்ய தீர்மானிக்கப்பட்டதோடு, பிரதிவாதிகள் மற்றும் சாட்சியாளர்களை நாளாந்தம் நீதிமன்றில் சமூகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# குழந்தையை கிணற்றில் வீசிய தாய் கைது

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - பிரமந்தனாறுப் பகுதியில் குழந்தையை பிரசவித்து கிணற்றில் வீசிய தாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போது அவரை அடுத்த மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (கே)

# நித்திரைப்பாயில் சிப்பாய் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் நித்திரைப் பாயிலேயே மரணமடைந்துள்ளார்.

யாழ். நகரில் இயங்கும் சிவில் நிர்வாக அலுவலகத்தில் கடமையாற்றி வந்த பொலநறுவையைச் சேர்ந்த சதுங்குமார பண்டாரநாயக்க (வயது - 28) என்பவரே நேற்று மரணமடைந்தவராவார்.

இவரது சடலம் யாழ் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விசேட மருத்துவப் பரிசோதனைக்காக இவரது சடலத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

இவர் 512 ஆவது பிரிகேட்டில் கடமையாற்றும் 23 ஆவது கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எஸ்)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக எடுக்க வேண்டிய சட்ட திட்டங்கள்

## இன்றும் நாளையும் கிளிநொச்சியில் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் கிளிநொச்சியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் வீட்டு வன்முறைக்கு எதிராக மேற்கொள்ளப்படவேண்டிய சட்ட திட்டங்கள் குறித்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச சபையில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் நீதிச் சேவை ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டு, சிறுவர் மீதான துஷ்பிரயோகங்களை எவ்வாறு தடுப்பது, வீட்டு வன்முறைகளைத் தடுக்கும் வழிகள் குறித்தும், அவ்வாறான சம்பவங்கள் நடந்தால் அதற்கெதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட திட்டங்கள் குறித்து கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

அத்துடன் இன்றைய தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முல்லை மாவட்ட பொலிஸாருக்கான கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. அதேபோன்று நாளையதினம் கிளிநொச்சி பிரதேச சபையில் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கான கருத்தரங்கு இடம்பெறும் அதே வேளை, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸாருக்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இருதய ஆய்வுகூட உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான இருதய ஆய்.வுகூட உபகரணங்களை கனடா உயர்ஸ்தானிகர் நேற்று வழங்கி வைத்தார்.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் இந்த உபகரண கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

கனடாவில் உள்ள கனேடிய மருத்துவ மற்றும் பல் அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் தலைவரும் இருதய மருத்துவருமான வி.சாந்தகுமாரின் ஏற்பாட்டில் 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான எதிரொலி இதய துடிப்பு பதிவு கருவி, ஈ.சி.ஜி இயந்திரம், தானியங்கி இரத்த அமுக்க கண்காணிப்பு கருவிகள் ஆகியன யாழ். போதனா வைத்தியசாலை இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பூபாலன் லக்ஸ்மனிடம் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் புருஸ் லெவி உபகரணங்களை வழங்கிவைத்ததுடன், இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் இருதய ஒலியதிர்வு பிரிவு ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் றோட்டறிக் கழக தலைவர் வி.ரமணா, றோட்டறிக் கழக திட்ட இணைப்பாளர் ஏ.எம்.முபாரக், சுகாதாரத் திணைக்கள மேலதிக செயலாளர் டாக்டர் பி.ஜி.மகிபால ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்)

# பிரிவினைவாதிகளின் திரிபுபடுத்தலை உறுதிப்படுத்திய ஆணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

பிரிவினைவாதிகள் வடக்கு, கிழக்கில் ஏற்படுத்திய திரிபுபடுத்தலை மேலும் உறுதிப்படுத்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கை மூலம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். பிரிவினைவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் பொருத்தமான காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை யுத்தத்தில் வெற்றி பெறும் என வெளிநாடுகளோ, இந்தியாவோ, இலங்கையில் வாழும் பலரோ நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இந்தத் தோல்வியுடன் அவர்கள் தொடர்ந்தும் இலங்கை மீது விமர்சனங்



களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில், வடக்கு கிழக்கில், பிரிவினைவாதம் ஏற்படுத்திய திரிபை, உறுதிப்படுத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இனவாத குழுக்களுக்கு தேவையான அடிப்படையை ஆணைக்குழு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. அவர்களின் வைராக்கியத்திற்கு எமது கருணையை வெளிப்படுத்த இடமளிக்க முடியாது. 4 வீதமாக உள்ள தமிழர்களுக்கு நாட்டில் 96 வீதமுள்ள பெருபான்மை இனத்தை அடிபணிய செய்ய இடமளிக்க முடியாது. வெளிநாடுகள் இலங்கையில் அனர்த்தத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணில், சஜித்தை ஒன்றிணைக்க உறுதிபூண்டுள்ளாராம் 'கரு'

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் ஒன்றிணைப்பதற்கு தான் உறுதி பூண்டுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிருலப்பனை அவெனியூவில் தனது அலுவலகத்தை நேற்று திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் ஏனையோரை நான் ஒன்றிணைப்பேன். இது எனது கடமை என கரு ஜயசூரிய கூறினார். அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு கட்சியின் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைவது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சிக்காக கடமையைச் செய்வதற்கு பதவி அவசியம் இல்லை எனவும் அதனால் தான் எந்தவொரு பதவியையும் எதிர்பார்க்கவில்லை எனவும் செயற்குழு அங்கத்தவர் பதவியை ஏற்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கான நோக்கத்தை கொண்டிருக்கவில்லை எனவும் மகாநாயக்க தேரர் மற்றும் பலர் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்ததன் காரணமாகவே தலைவர் பதவிக்கு தான் போட்டியிடத் தீர்மானித்தாகவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். - கொழும்பு இடையில் மீண்டும் விமான சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் மீண்டும் விமான சேவையை ஆரம்பிக்கப் போவதாக எக்ஸ்போ விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தினமும் இரண்டு விமான சேவைகளை நடத்தவுள்ளதாகவும், இதற்கு 12 ஆசனங்களைக் கொண்ட விமானங்களை பயன்படுத்தவுள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்விமான சேவையை ஆரம்பிக்க குடியியல் விமான சேவை அதிகார சபையின் அனுமதிக்காக காத்திருப்பதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

ஏ - 9 நெடுஞ்சாலை திறக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு தினமும் சுமார் 200 பேர் விமானம் மூலம் பயணம் செய்து வந்தனர்.

தற்போது ஏ - 9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டுள்ள நிலையில் தினமொன்றுக்கு தேவைப்படும் விமானப் பயண ஆசனங்களின் எண்ணிக்கை 36 ஆகக் குறைந்துள்ளதாக எக்ஸ்போ விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.